Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 30 வெள்ளிக்கிழமை (12.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 194

நேரத்தை நீடிக்க (03)



சம்பியன் (09)






செம்மொழி கற்க... (10)

கோடை... (11)



கண்டதுண்டா இவரை (17)



# இலங்கை மீது இந்தியா அழுத்தம் கொடுக்காது



(புதுடில்லி)

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிப்பது போன்ற எந்தவிதமான அழுத்தங்களையும் இந்தியா பிரயோகிக்காது என்றும் அவ்வாறான நடவடிக்கைகள் மொத்தத்தில் இலங்கையில் வாழும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களையே பாதிக்கும் என்றும் தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார். இலங்கை மீது பொருளாதாரத்தடை விதித்தால் இந்திய மத்திய அரசாங்கத்தினால் யுத்த வலயத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட வேண்டிய இக்கட்டான நிலை தோன்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய மத்திய அரசாங்கம் 4000 கோடி ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் விடுதலை

கடந்த 18 ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 19 பேர் நேற்று மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவுக்கு அமைய இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மன்னார் நீதிமன்றத்தில் மாவட்ட பதில் நீதவான் முஹமட் சபூர்தீன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே அவர் இவர்களை விடுதலை செய்துள்ளதுடன் அவர்களிடம் மீட்கப்பட்ட நான்கு ரோலர் படகுகளையும் மீனவர்களிடம் ஒப்படைக்குமாறும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய சுற்றுலா பாதிப்பு; விமானசேவைகளும் நிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பெரும் சரிவுநிலை தோன்றியுள்ளது. மிஹின் லங்கா விமானப் போக்குவரத்து நிறுவனம் தமிழகத்திற்கான சேவைகளை ஜுன் முதலாம் திகதியிலிருந்து நிறுத்த விருப்பதாக அறிவித்திருக்கிறது. கொழும்பிற்கும் திருச்சிக்குமிடையே வாரம் நான்கு முறை மிஹின் லங்கா விமானங்கள் வந்து போகின்றன. தமிழகத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உதவிகள் தளர்வின்றி தொடரும்

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கும், இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவதற்கும், அவர்களுக்குரிய வாழ்வாதாரத்திற்கும் இந்திய அரசாங்கம் உதவி வழங்கி வருகின்றது. இந்த உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் சிறப்பு செயலர் ராகவன் கிளிநொச்சியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்துள்ளார். போரினால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வர்த்தகர்களின் சேதம்



19 ஆம் பக்கம் பார்க்க

## முச்சக்கர வண்டிகளுக்கு யாழ். மாநகரசபை "ஸ்ரிக்கர்"

### வீதி ஒழுங்கிலும் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பயணிக்கும் முச்சக்கரவண்டிகளுக்கு யாழ். மாநகரசபையின் "ஸ்ரிக்கர்" ஒட்டப்பட்ட இருக்கிறது என்றும் யாழ். நகரில் உள்ள வைரவர் கோவில் வீதியை காலை 7.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரை ஒரு வழிப் பாதையாக மாற்றுவதற்கும் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகருக்குட்பட்ட வீதிகள் போக்குவரத்து நெருக்கடிக்குட்படுவதால் மக்களின் தேவை காரணமாக வைரவர் கோவில் வீதியை ஒருவழிப் பாதையாக மாற்றம் செய்வது தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். மாநகர சபை முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலின் போதே இந்தத்

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவுடன் பேச மன்மோகன் விருப்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்தவைச் சந்தித்து உரையாடுவதற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விருப்பம் தெரிவித்துள்ளார். இதற்காக ஜனாதிபதி மகிந்தவை புதுடில்லிக்கு வருமாறும் இந்தியப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைக்கு வருகைதந்த இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் பிரதமர் மன்மோகன் மகிந்தவுக்கான அழைப்புக் கடிதம் ஒன்றை வழங்கியதாக தெரியவருகின்றது. அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடம் கடிதத்தை நாடாளுமன்ற குழு கையளித்ததாகவும் அந்த கடிதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

## அதிகவேகம் ஆபத்தில் முடிந்தது

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெரு சந்தியில் ஹையஸ் வான் ஒன்றும் ஆட்டோ ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியதில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர். யாழ். வேம்படி வீதியில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்த ஆட்டோவும், எயார்ரெல் நிறுவனத்தின் ஹையஸ் வாகனம் ஒன்றும் சந்தியைக் கடக்க முற்பட்ட போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க



## சட்டவிரோத சிகரெட்டுக்கள் சிக்கின

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்களை சுங்கப் பிரிவினர் குருநாகலில் கைப்பற்றியுள்ளனர். சுமார் 33 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பிரதி சுங்கப் பிரதி சுங்கப் பணிப்பாளர் எச்.ரி.தஸ்லிம் குறிப்பிட்டுள்ளார். ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 400 சிகரெட்கள் கைப்பற்றப்பட்ட பொதியில் அடங்கியிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். அன்பளிப்பாக பெயரிடப்பட்டு நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த பொதியைப் பெற்றுக்கொள்வதற்காக வந்திருந்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

# போலியான கலாநிதிகள்; இது எந்த நாட்டு உற்பத்தி

## புருவத்தை உயர்த்துகின்றனர் யாழ்.குடா மக்கள்

(திருநெல்வேலி)

தன்னிச்சையாகத் தமது பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டத்தை சேர்த்துக்கொள்ளும் சில பேர்வழிகளைப் பற்றிக் கல்விச் சமூகம் மிகவும் கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதிக்குரிய படிப்போ, பட்டங்களோ இல்லாதவர்கள் இப்படியான போலி வடிவங்களுடன் திரிவதனால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழங்களில் ஆய்வுகள், ஆராய்ச்சிகளைப் செய்தவர்கள் பலர் பெரிதும் வேதனை அடைந்திருப்பதாகத் தெரிகிறது.

எவரால், எங்கே, எப்போது இந்தப் போலிகளுக்குப் பட்டம் வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஜோதிடம், ஆன்மீகம், விமர்சனம் என சில துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் சிலர் தான் தோன்றித்தனமாகத் தமது பெயருடன் கலாநிதி என்னும் உயர் பட்டத்தை சேர்த்துக்கொள்வது தவிர்க்கப்படல் வேண்டும் எனப் பல அறிஞர்களினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களினால் வழங்கப் பட்டவையே உண்மையான கலாநிதிப் பட்டங்களாகும். அதை விடுத்துக் கண்டவர்கள் நின்றவர்கள் எல்லோரும் கலாநிதிகளாக மாறமுடியும் என்றால் பல்கலைக்கழகம், படிப்பு என்பதெல்லாம் எதற்கு எனப் பட்டதாரிகள் பலர் குரல் கொடுத்துள்ளார்கள். பலமுறை பல கல்வியியலாளரினால் சுட்டிக் காட்டப்படும் இந்தப் போலிக் கலாநிதிகள் திருந்துவதாக இல்லை. இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலமே இவர்களைத் திருத்த முடியும் எனப் பலதரப்பட்டவர்களினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (137)

---

## சிறுவிளம்பரம்

சகல வசதிகளும் கொண்ட காணியுடன் சேர்ந்த ஒரு வீடு விற்பனைக்குண்டு. குடியிருக்க அல்லது ஏதேனும் தொழிலுக்கு பாவிக்கக்கூடிய நல்ல சுற்றடாடலில் உண்டு.

க.சீவறட்ணம் சிவராசா, சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/176)

## கூட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்யுங்கள்

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கை தொழிலாளர்களுக்கு பாதமானது என கருதப்படும் பட்சத்தில், அதனை ரத்து செய்ய முடியும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வாறு கூட்டு உடன்டிக்கைக்கு எதிராக வழக்கு தொடரப்படும் பட்சத்தில், வழக்கு நீண்டகாலமாக இழுத்தடிக்கப்படுமாக இருந்தால், தொழிலாளர்களுக்கான வேதன வழங்கலில் சிக்கல் ஏற்படும் என்ற சில தொழில்கட்சிகள் கருதுகின்றன.

## கட்டடத் தொழிலாளி காயம்

கிறைண்டர் வெட்டியதில் படுகாயமடைந்த நிலையில் கட்டடத் தொழிலாளி ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் நடைபெற்ற இச் சம்பவத்தில் உடுவில் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த தர்மராஜா சந்திரகுமார் (வயது-25) என்ற கட்டடத் தொழிலாளியே படுகாயமடைந்துள்ளார்.

மானிப்பாய் பகுதியில் உள்ள வைரவர் கோவில் ஒன்றுக்கு மாபிள் பதிப்பு வேலையில் கிறைண்டர் பயன்படுத்தும் வேளையில் அக் கிறைண்டர் தவறுதலாக சறுக்கி அவரது தொடைப் பகுதியில் காயத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்துக்கான பொதுக்கூட்டமும், நிர்வாகத்தைத் தெரிவும் எதிர்வரும் 20. ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வைத்தியசாலை பொறுப்பதிகாரி எஸ்.கே.நடராஜா தலைமையில் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (104)

## பரிசளிப்பு விழா

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலையின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை 9.00 மணிக்கு ஆலய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.தம்பாப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் அலகு கல்வி இணைப்பாளர் கந்தையா சிவராசா, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன், ஆசிரியர் பண்டிதர் கந்தையா ஈஸ்வரநாதப் பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (104)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சித்த மருத்துவ அலகு

**சித்த மருத்துவ அலகு விரிவுரைகள் ஆரம்பம்**

1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இறுதி வருட மாணவர்களுக்கான 2012/2013 ஆம் ஆண்டிற்கான விரிவுரைகள் 17.04.2013 புதன்கிழமை ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகின்றேன்.

பதிவாளர் (C/2659)

# பறண்நட்டகல் மக்கள் வீதி மறியல் போராட்டம்

வவுனியா பறண்நட்டகல் மக்கள் நேற்று முன்தினம் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

எமது கிராமத்திற்கான வீதி புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இவ் வீதியின் ஊடாக கனரக வாகனங்கள் சென்று பெறுமதியான மரங்கள் உட்பட கரவல் மண்ணை ஏற்றிச்செல்கின்றன. இதன் காரணமாக எமது வீதி மிகவும் மோசமாக பாதிப்டைந்துள்ளதுடன், எமது விவசாய நிலங்களுக்கு செல்லும் கால்வாய்கள் சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக நாம் இவ் வீதியால் கனரக வாகனங்கள் செல்ல வேண்டாம் என பல தடவை தெரிவித்தோம். இத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நாம் வீதி மறியலில் ஈடுபட்டோம் என தெரிவித்தனர்.

இதன் போது இக் கிராமத்தில் இருந்து மரம் மற்றும் கிரவலை ஏற்றிச்சென்ற கனரக வாகனங்களை மக்கள் மறித்து வைத்திருந்ததுடன் அதன் சாரதிகளுடன் முரண்பட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து, வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் தலைவர் க.சிவலிங்கத்திற்கு தகவல் வழங்கப்பட்டு அவர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து வாகனச்சாரதிகளுடன் பேச்சு நடத்தியதன் பின்னர் பிரதேசசபையிடம் அனுமதி பெறாது கிரவல் ஏற்றப்படுவது தெரிய வந்தது. இதனையடுத்து இச் சம்பவம் தொடர்பாக தமது சபை நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்ததை தொடர்ந்து வாகனங்களில் இருந்து கிரவல் மண்ணை அப்பகுதியில் இறக்கி விட்டு இவ் வாகனங்களையும் மரங்களுடன் நின்ற வாகனங்களையும் செல்வதற்கு மக்கள் அனுமதித்தனர்.

எனினும், மீண்டும் இவ் வீதியை கனரக வாகனங்கள் பயன்படுத்துமானால் தாம் மீண்டும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனப் பொது மக்கள் தெரிவித்தனர். (160)

# முல்லைத்தீவு பாடசாலைகளின் குறைபாடுகளை களைய நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடத்தை கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னர் இப்பிரதேசம் இருந்த நிலையினை எங்களால் உணரமுடிகின்றது. பயங்கரவாத செயற்பாடுகளால் முல்லை மாவட்ட மக்கள் எதிர்நோக்கிய பெரும் அசௌகரியங்களை நாம் அறிவோம். அனைவரும் நிம்மதியற்ற, அச்சம்நிறைந்த சூழலிலேயே வாழ்ந்து வந்தோம். இன்று இப்பிரதேசத்தின் அபிவிருத்திகளை நோக்குங்கள். நவீன பாதைகள் அமைக்கப்படுகின்றன, மின்சாரமற்ற கிராமங்களுக்கு மின்சாரம் கிடைக்கின்றது, பாடசாலை கட்டடங்கள் முதல் ஏனைய பொது நோக்கு மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றன. இவையெல்லாம் இம்மாவட்ட மக்களினது மேம்பாடுகளுக்கு என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் என்ற வகையில் என்னிடம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து வேலைத் திட்டங்களுக்குமான அனுமதியினை வழங்கி வருகின்றேன். அது தமிழர் களுக்கா, முஸ்லிம்களுக்கா என்று பார்ப்பதில்லை. என்றார்.

# ஆனையிறவு கடல் நீரேரியில் இறால் பிடிப்பதற்கு அனுமதி

(கிளிநொச்சி)

ஆனையிறவு கடல் நீரேரியில் இறால் பிடிப்பதற்கு ஆனையிறவைச் சூழவுள்ள கடற்றொழில் சங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு கடல் நீரேரியில் விடப்பட்ட இறால் குஞ்சுகள் முதிர்ச்சியடைந்துள்ள நிலையில் அதனை கடற்றொழிலாளர் பிடித்து விற்பனை செய்து வருமானம் ஈட்டிவருகின்றனர்.

இவ்வாறு அங்கு பிடிக்கப்படும் இறால்களில், நாற்பது இறால்கள் சேர்ந்து ஒரு கிலோ எடையுடன் காணப்படுவதாகவும், இந்த ஒரு கிலோ இறால் 550 ரூபா முதல் 600 வரை விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அனுமதி கிடைத்ததையிட்டு இப்பகுதி மீனர்வர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (பா)



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் உள்ள கண்ணகை அம்மன் என அழைக்கப்படும் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் நேற்றைய கொடியேற்ற நிகழ்வில் பிரதம சிவாச்சாரியார் கொடியேற்றுவதையும், அம்பாள் உள்வீதி வலம்வருவதையும் காணலாம். (படம் : கீரன்)

# அறநெறி மாணவர்களுக்கு இந்துசமயப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே இந்துசமயப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி வருடப்பிறப்பான நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு தோரணம் பின்னுதல், கோலம் போடுதல், திருக்குறள் மனனப்போட்டிகள் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் தரம் 3 முதல் 7 வரை மத்திய பிரிவாக 20 நிமிடத்திற்குள் 5 தோரணம் பின்னுதல் வேண்டும். மேலும் தரம் 8 முதல் 11 வரை மேற்பிரிவாக பத்து நிமிடத்திற்குள் 5 பின்னுதல் வேண்டும்.

கோலப்போட்டியில் தரம் 1, 2 கீழ்ப்பிரிவிலும், தரம் 3 - 7 மத்திய பிரிவிலும், தரம் 8 தொடக்கம் தரம் 11 வரை மேற்பிரிவிலும் மாணவர்கள் போட்டியிடுவதுடன், கோலமானது நீளம், அகலம் முறையே 45 சென்ரி மீற்றர் அளவில் தயாரிக்கப்படல் வேண்டும். வேறுநபர்களது உதவிகள் பெறப்படலாகாது.

திருக்குறள் மனனப்போட்டியில் தரம் 3 தொடக்கம் தரம் 7 வரையான மத்தியபிரிவு மாணவர்களுக்கு 20 திருக்குறளும், தரம் 8 முதல் 11 வரையான மேற்பிரிவு மாணவர்களுக்கு 40 திருக்குறளும், ஒழுங்குமுறைப்படி சொல்லப்படல் வேண்டும்.(43)

# அரச சேவையில் உள்ளவர்கள் மக்களுக்காக சேவையாற்றவேண்டும்

## -தபாலக மேற்பார்வை உத்தியோகத்தர் சி.குமாரவேலு அறிவுரை -

(யாழ்ப்பாணம்)

மக்களின் தேவையை அறிந்து சேவை நோக்குடன் சிறப்பாக செயற்பட்டு அனைவரது பாராட்டுக்களைப் பெற்று மக்கள் நெஞ்சங்களில் இடம்பிடித்தவர் தபாலதிபர் தர்மராஜா. இவரைப் போன்று ஏனைய உயரதிகாரிகளும், மக்களுக்கு சேவை செய்து அவர்களின் மனங்களில் இடம்பிடிக்க வேண்டும் என யாழ்.தபாலக மேற்பார்வை உத்தியோகத்தர் சி.குமாரவேலு தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தில் முப்பத்தாறு ஆண்டுகள் கடமையாற்றி யாழ்.பிரமத தபாலக அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர் ஆ. தர்மராஜாவின் சேவைநலன் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதி பிரதம அஞ்சல் அதிபர் ர.லோகஞானம் தலைமையில் கடந்த வாரம் யாழ்.பிரதம தபாலக வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேற்பார்வை உத்தியோகத்தர் தொடர்ந்து பேசுகையில்,

அன்பாகவும், பண்பாகவும், அனைவருடனும் பழகும் சுபாவமுள்ள தர்மராஜா சிறந்த ஒரு நேர்மையும், கண்ணியமும் மிக்க தபாலதிபராவார். பிறரை மதித்து நடக்கும் பண்பு மற்றவர் கருத்துக்கு மதிப்பளிக்கும் பண்பு, ஊழியர்களின் தவறுக்காக உயர் அதிகாரிகளிடம் கருணை காட்டுமாறு கோரும் பண்பு என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தபாலதிபர் தர்மராஜா ஊழியர் நலன்சார்ந்த உத்தியோகத்தர் என்ற பெயர் எடுத்த சேவையாளன். அவர் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்து சமூகத்திற்குச் சிறந்த சேவை செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் தபாலதிபர்களான செலவி.மு.சுகந்தினி, எஸ்.இராசரத்தினம், என். ஜெயகாந்தன், ஆர்.நந்தகுமார் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# போசுட்டி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் - கருங்காலி போசுட்டி அருள்மிகு முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 23 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு 8.00 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.00 மணிக்கு சங்காபிஷேகமும், 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், தொடர்ந்து இரதோற்சவமும் இடம்பெறும்.

25 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7.00 மணிக்கு வியாவில் ஐயனார் ஆலய தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

# வருடப்பிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான விஜய வருடப்பிறப்புவிழா நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை இரவு 11.45 மணி அஸ்டோத்திர சத கலச சங்காபிஷேகமும், இரவு 1.29 மணிக்கு அம்பாளுக்கு விசேட பூசையும், இரவு 2 மணிக்கு அர்த்தசாம பூசையும் இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், காலை 7.30 மணிக்கு சங்கிராந்தி தீர்த்தமும் இடம்பெறவுள்ளது.

# சமாதான நீதவான் நியமனம்

(இருபாலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் தலைவரும், செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைப் பிரிவின் தலைவருமான பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார்.

பிரபல சமூக சேவையாளரான இவர் யாழ்.பல்கலைக் கழகத்தின் ஓய்வுநிலை விஞ்ஞான பீடாதிபதியாகவும், இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கொழும்பு தேசிய தலைமையகத்தின் முன்னாள் தலைவருமாவார். (08)

# பேருந்து சேவையின் நேரத்தை நீடிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 3 கிராமங்களையும் உள்ளடக்கியதாக முல்லைத்தீவிலிருந்து கொக்கிளாய் நோக்கிச் செல்லும் அரச தனியார் பேருந்துகள் கொக்கிளாயிலிருந்து முல்லைத் தீவுக்கு பிற்பகல் 3.30 மணிக்கு செல்வதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், வடக்கு, மத்தி, தெற்கு, கருனாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இப்பேருந்து சேவை மூலம் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப்பேருந்து சேவைகள் கொக்கிளாயில் இருந்து முல்லைத்தீவுக்கு திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 3.30 மணியுடனும் சனிக்கிழமைகளில் 3 மணியுடனும் ஞாயிற்றுக் கிழமைகளில் நண்பகல் 12.30 மணியுடனும் திரும்புகின்றன. குறித்த நேரத்தின் பின் கொக்கிளாய் - முல்லைத் தீவுக்கான எந்தவொரு பேருந்துசேவையும் இடம்பெறுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குறிப்பிட்ட நேரத்துடன் முடிவடையும் பேருந்துச் சேவையால் பாடசாலை மாணவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலர் சிரமப்படுவதுடன், சிறிது நேரம் தாமதமானாலும் தனியார் வாகனங்களில் அதிக பணங்கொடுத்துச் செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இக்கிராம மக்களின் போக்குவரத்துத் தேவையைக் கருத்திற் கொண்டு இப்பேருந்து சேவையினை திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 4.30 மணிவரை நீடித்தால் பொதுமக்கள் மட்டுமல்லாது அரச அதிகாரிகளும், தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களும் சிரமமின்றி போக்குவரத்தை மேற்கொள்ள முடியும் எனவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# மானிப்பாய் இந்துவில் கலைப்பிரிவுடன் தொழில் நுட்ப பாடங்கள் இணைப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கலைப்பிரிவுடன் தொழில் நுடப பாடங்களும் இணைந்ததாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது என கல்லூரி முதல்வர் எஸ்.சிவனேஸ்வரன்அறிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு உயர்தரப்பிரிவில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு தகவல்தொழில்நுட்பம், வன்தொழில்நுட்பம், மென் தொழில் நுட்பம் ஆகிய பாடங்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் கலை, வர்த்தகப் பிரிவு பாடத்தொகுதிகளில் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் கனிஷ்ட பல்கலைக்கழக அனுமதியினை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாக இப்பாடத்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

தேசிய பாடசாலையில் உள்ள ஆசிரிய வளங்களினை பயன்படுத்தி புதிய செயல் முறையில் மானிப்பாய் இந்துவில் கல்வி அமைச்சர், வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோரது வழிகாட்டலிலும், வழிப்படுத்தலிலும் இப்பாடநெறிகள் செயற்படுத்தப்படவுள்ளதுடன்

இச்செயற்பாடு எதிர்காலத்தில் மாணவர்கள் புதிய தொழில் வாய்ப்புக்களினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாக அமையும் என கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



30 வருடகால பொலிஸ் சேவையை அடையாளப்படுத்தும் 'சியபத்வில' வேலைத்திட்ட நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு வருகைதந்திருந்த டீ.ஐ.ஜி.காமினிசில்வா உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பாதுகாப்பு அமைச்சின் பிரதிச்செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் பொலிஸாரினையும், கண்டிய நடன நிகழ்வையும், காணலாம். (படங்கள்: பா.பார்த்தீபன்)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## போதும், இனி நிறுத்துங்கள்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை கொலைசெய்வதற்கு அரசும் இராணுவத்தினரும் சதி செய்து வருவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறாராம். இதை கூட்டமைப்பின் பத்திரிகையே கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்து, அடுத்த தேர்தலுக்காக மக்களுக்கு ஆவேச சுதியேற்றுதல் ஆரம்பமாகிவிட்டதை, இத்தால் சகலமானவருக்கும் அறியப்படுத்தியிருக்கிறது.

வெள்ளைக்கொடி பிடித்து வந்தவர்களையே அரசபடையினர் சுட்டுக்கொன்று விட்டதாக ஒருபுறம் குற்றம் சாட்டிக்கொண்டு, தங்களைக் கொலைசெய்வதற்குத்தான் இராணுவம் பெரிய சதிவலைகளை எல்லாம் பின்னி முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறது என்று இவர்கள் "சீன்" போடுவது சிரிப்பைத்தான் வரவழைக்கிறது. யார் செய்தாலும் கொலை என்பது சிரிப்புக்குரிய விசயம் இல்லை என்றபோதிலும், இவர்களது அலப்பறையை கொஞ்சமும் சீரியஸாகவே எடுக்க முடியவில்லை.

கொஞ்சம் கூட சிரிக்காமல், தாங்கள் தான் அரசுக்கு சிம்மசொப்பனம் என்பது போலவும், அரசாங்கம் தங்களைக் கண்டு பயந்து நடுங்குவது போலவும் பல காலமாகவே இதே வீரக்கதை வீச்சுக்களை விசிறித் தமிழ்மக்களை ஏமாற்றி வருகிறார்கள். அரசு தரப்பினர் பயந்துபோய் தீர்வைக் கொடுத்ததாகவோ இவர்களது சுயநிர்ணயம் தனியாட்சி அலகு போன்றவைக்கு அஞ்சிப் பேசக் கூப்பிட்டதாகவோ சரித்திரம் இல்லை. பேச்சையே நடத்தாமலிருக்கத்தான் அவை உதவியிருக்கின்றன. இருந்தாலும் தங்கள் கோரிக்கைகளுக்குப் பயந்துபோய் தங்களைக் கொல்லத் துடிக்கிறது அரசு என்ற நாடகத்தை இவர்கள் விடாமல் நடித்து வருவது நமக்குத்தான் சிரிப்பை உண்டாக்குகிறது.

எச்சரிக்கைகள் விடுவதும், சர்வதேசத்தை அழைத்துவந்து அரசை மண்டியிட வைப்போம் என்பதும், தீர்வை வைக்காவிட்டால் தெரியும் சேதி என்று உறுமுவதுமாக இவர்களது இந்த அலப்பறைகள்தான் அரச தரப்புக்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆதரவைப் பெருக்கி ஸ்திரமடைய வைக்கிறது எனும்போது, இவர்களது பூச்சாண்டிகள் எல்லாம் அவர்களுக்கு விருப்பமானவையாகத்தானே இருக்க முடியும்?

அதேபோல, படையினரை சீண்டி உதை வாங்குவதும், இனரீதியான ஆவேசங்களைக் கக்கி சிங்களத் தரப்பிலிருந்தும் இனஆவேசப் பேச்சுக்களை வரவழைப்பதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிராக அரசு சதிவலைகளைப் பின்னுகிறது என்பதற்கு "சாம்பிள்"களை உருவாக்கி பகையை முறுக்கிக் காட்டிக்கொண்டிருப்பதும் – தேர்தலைக் குறிவைத்த இவர்களது தந்திரோபாயங்கள் என்பதை இன்னும் யார் யார் தான் புரிந்துகொள்ளாமலிருப்பர்?

இவர்கள் அரச தரப்புக்கு சங்கடங்களை உருவாக்காமல் சாதகமாகவே நடந்துகொள்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள சமீபத்திய உதாரணம். கடந்த செவ்வாயன்று இந்திய நாடாளுமன்றக் குழுவினர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள் அல்லவா! அவர்களிடம் இந்திய அரசுக்கு இவர்கள் கேட்டனுப்பிய விண்ணப்பம் என்ன?

இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தமிட்டு தமிழ்மக்களுக்கென கிடைத்த 13-வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும்படி வலியுறுத்துவதை இந்தியா கைவிட வேண்டும்; வடக்கு கிழக்கில் சுயாட்சியுடன் கூடிய இடைக்கால அரசை ஏற்படுத்தித் தரவேண்டும். இதுதான் இவர்கள் கேட்டது. இலங்கை அரசு சந்தோசப்பட்டிருக்குமா இல்லையா? தீர்வு வந்துவிடக் கூடாதென்பதையே கூட்டமைப்பினர் விரும்புகிறார்கள் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நின்று வென்று எதிர்க்கட்சியாக அந்த சபையிலும் அமர்ந்துகொண்டு, வடக்கு கிழக்கிற்கு இடைக்கால அரசு கேட்கிறார்களாம்! இதற்குச் சிரிக்காமல் என்ன செய்வது? மேலும், 13-வது திருத்தத்தையும் கைவிட்டுவிட்டு, தனிநாட்டையா இந்தியா எடுத்துத்தருமென்று எதிர்பார்க்கிறார்கள்?

இப்படி மாயைகளைக் காட்டியே தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவிடாமல் செய்துகொண்டிருப்பதை இவர்கள் இனியாவது நிறுத்த வேண்டும்.

- ஆசிரியர்

# முதலமைச்சர்களின் முடிவின்படியே படையினர் காணிகளை எடுக்க வேண்டும்

## பாதுகாப்பு செயலர் உத்தரவு

(கொழும்பு)

படையினர் காணிகளை கையகப்படுத்தும் போது அந்தந்த மாகாண முதலமைச்சர்கள் என்ன முடிவுகளை எடுக்கிறார்களோ அதன்படிதான் செய்ய வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ கட்டளையிட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

கிழக்கே திருகோணமலை மாவட்டத்தின் புல்மோடைப் பகுதியில் முஸ்லிம் மக்களின் காணிகளை கையகப்படுத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி, மாகாணசபையிலும் விவாதத்துக்கு வந்தது.

இதையடுத்து மாகாண சபையின் முதலமைச்சர், ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ரமலான் முகமது, அன்வர் உட்பட பலர், நேற்று முன்தினம் மத்திய அரசில் அமைச்சராக இருக்கும் பைசர் முஸ்தபாவுடன் பாதுகாப்புச் செயலரைச் சந்தித்து பேசினர்.

இதன் போதே பாதுகாப்புப் படையினர் முதலமைச்சரின் முடிவுகளை ஒட்டியே காணிகளை கையகப்படுத்த வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக நஜீப் ஏ மஜீத் தெரிவித்தார்.

அண்மையில் புல்மோட்டைப் பகுதியில் கடற்படையினர் கையகப்படுத்திய உரிமம் பெறப்பட்ட காணிகளை அவர்களிடம் மீண்டும் வழங்குமாறும் பாதுகாப்புச் செயலர் தெரிவித்ததாகவும் மாகாண முதல்வர் தெரிவித்தார்.

அரசியல் சாசனத்தின் 13 ஆவது சட்டத் திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு காணி தொடர்பான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதைதான் ஆதரிப்பதாகக் கூறும் நஜீப் ஏ மஜித் அண்மையில் பதுளையில் நடைபெற்ற முதல மைச்சர்கள் மாநாட்டிலும் இது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# வருமான இழப்பை ஈடுசெய்வதற்கு புலிகளுக்கு நிதியுதவி அளித்த இந்தியா

(கொழும்பு)

இந்தியா விடுதலைப் புலிகளுக்கு 50 இலட்ச ரூபா நட்டஈடு வழங்கியதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது. இந்திய இலங்கை உடன்படிக்கையினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களுக்கு நட்டஈடாக இந்தியா இந்தப் பணத்தொகையை புலிகளுக்கு வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அமைதி காக்கும் படையினரை அனுப்பி வைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படக் கூடிய வரி வருமான இழப்பிற்கு, ஈடாகவே இந்தத்தொகை வழங்கப்பட்டது என அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டிக்ஸித் தெரிவித்தார் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த நட்டஈட்டுத் தொகை புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்திக்கும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இரகசிய இணக்கப்பாட்டுக்கு அமைய இந்தப் பணக்கொடுப்பனவு வழங்கப்படுவதாக புலிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணசபையில் கூடுதல் ஆசனங்களை வழங்குதல், புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஒரு பில்லியன் ரூபா பண உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த இரகசிய இணக்கப்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மாத்தளை மனிதப் புதைகுழிப்பகுதியில் இரவுவேளை நடமாடியது யார்?

(மாத்தளை)

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மனிதப் புதைகுழி உள்ள பிரதேசத்தில் பாதுகாப்பு பிரிவினர் என சந்தேகிக்கப்படும் சிலர் நடமாடியதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு வேளையில் இக்குழுவினர் இடையிடையே நடமாடியதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க பொலிஸ் மாஅதிபரிடம் முறையிட்டுள்ளதாக அக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் ஜீப் ஒன்றில் இராணுவ சீருடையைப் போன்ற உடை அணிந்த 10 பேர் கொண்ட குழு மனிதப் புதைகுழி உள்ள இடத்தில் நடமாடியதாக தமது கட்சியின் மாத்தளை மாவட்ட உறுப்பினர் தகவல் வழங்கியதாக சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணையை மேற்கொள்ளுமாறு சோமவன்ச அமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து சோமவன்ச அமரசிங்க பொலிஸ் மா அதிபரிடம் தொலைபேசி மூலமாக முறையிட்டுள்ளதாக அக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

150இற்கும் மேற்பட்ட மனித உடல் எச்சங்கள் மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படகில் வந்த இலங்கை அகதிகள் நாடு கடத்தப்படுவரென அறிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் படகில் அவுஸ்ரேலியாவை சென்றடைந்துள்ள இலங்கை புகலிடக்கோரிக்கையாளர்களை மீண்டும் நாட்டிற்கு திருப்பியனுப்புவதற்கு அவுஸ்ரேலியா தீர்மானித்துள்ளது. அண்மையில் படகு மூலம் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னதாக இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் மேற்கு அவுஸ்ரேலியாவின் துறைமுகமொன்றை சென்றடைந்திருந்தனர். சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் கட்டாயம் நாடுகடத்தப்பட வேண்டியவர்கள் என அவுஸ்ரேலிய உள்துறை அமைச்சர் ஜேசன் க்ளேர் தெரிவித்துள்ளார்.

வழமையாக கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் பிரதேசங்களைத் தவிர்த்து வேறு வழியில் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியாவை அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்திய மாதிரி அதிகாரப் பகிர்வு வேண்டும் என்கிறார் சங்கரி

இந்திய மாதிரியிலான அதிகாரப் பகிர்வு முறைமை அறிமுகம் செய்யப்பட வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழாமிடம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மாதிரியிலான அரசியல் தீர்வுத் திட்டத்தின் மூலம் நாடு பிளவுபடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளுமாறு இலங்கையை வலியுறுத்துமாறு அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரியுள்ளார்.

விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் அதிகளவில் இராணுவ முகாம்களை அமைத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். புலிகள் மீளவும் ஒருங்கிணைவதாக காரணம் காட்டி அரசாங்கம் இவ்வாறு முகாம்களை அதிகரித்துச் செல்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அதிகளவு இராணுவ பிரசன்னமானது மக்களின் கருத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்தை ஒடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு காணப்படுவதாகவும், மொழிக் கலாசாரம் பண்பாடு போன்ற அனைத்துமே இந்தியாவிலிருந்து கிடைக்கப் பெற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய உலகமயமாக்கம்: யார் பலன் பெறுகிறார்கள்?

லஷ்மண பெருமாள்

200 ஆண்டுகளுக்கு முன்பாக, ஐரோப்பாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் தொழிற் புரட்சியை மேம்படுத்துவதும் மனிதத்தன்மையை ஏற்படுத்துவதும்தான் மிகப் பெரிய சவாலாக இருந்தது. 150 ஆண்டுகளுக்கு முன்பாக, தொழிற்சாலைகள் மிகுந்த நகரங்களில் அதிக எண்ணிக்கையில் குடிபெயர்ந்த மக்களுக்கு பாதுகாப்பையும், நகரங்களில் வாழ்வதற்கேற்ற சூழலை ஏற்படுத்துவதும் சவாலாக இருந்தது. 75 ஆண்டுகளுக்கு முன்பாக, மக்களுக்கு ஏற்பட்ட மன அழுத்தத்தைப் போக்குவதே சவாலாக இருந்தது. ஆனால், இன்று உலகம் எதிர்கொள்கிற மிகப் பெரிய சவால், புதிய உலகமயமாதல்தான் என்கிறார் The Price of Civilisation நூலாசிரியர் ஜெ.்.ப்ரி சாக்ஸ் (Jeffrey Sachs).

அதென்ன புதிய உலகமயமாக்கல்?

வணிகம், முதலீடு மற்றும் உற்பத்தி கூடங்கள் ஆகியவற்றின் மூலமாக உலகம் இணைக்கப்பட்டிருப்பதற்கு புதிய உலகமயமாதலின் தாக்கம் தான் காரணம். உலகமயமாதல் என்பது ஏதோ கடந்த 40 வருடங்களில் ஏற்பட்டதல்ல. கடந்த 2000 ஆண்டுகளாக பண்டமாற்று முறைகளும் வணிகமும் நடந்தேறி உள்ளன. சீனாவிலிருந்து பட்டு ஐரோப்பியப் பேரரசுகளுக்கு ஏற்றுமதியாகியுள்ளதும் அதற்கு மாற்றாக சீனா தங்கத்தைப் பெற்றுள்ளது என்பதும் வரலாறு. 15ஆம் நூற்றாண்டில் கிறிஸ்டோபர் கொலம்பஸ், வாஸ்கொடகாமா ஆகிய இருவரும் உலகத்தின் அனைத்துப் பகுதிகளையும் வணிகத்துக்கு அதாவது கடல் வழி வணிகம் செய்ய பாதை அமைத்துத் தந்தார்கள்.

டிஜிட்டல் காலம்தான் புதிய உலகமயமாதல் என்கிறார் ஜெ.்.ப்ரி. தொழில் நுட்பத்தின் துணை கொண்டும், பொருளாதார இணைப்புகள் மூலமும் ஏற்பட்ட மாற்றங்களே புதிய உலகமயமாதலுக்கான அடிகோல். உலகப் பொருளாதாரம் முன்பைவிட இப்போது அதிக அளவிற்கு இணைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், உலக அளவில் குறைந்த செலவில் விமானத்தின் மூலமும், கப்பல் சேவையின் மூலமும் பொருட்களை ஏற்றுமதி/இறக்குமதி செய்ய முடிகிறது. மேலும், வணிகம் சார்ந்த அத்தனை விடயங்களையும் கணினியில் சேமித்து வைப்பதும், செய்முறை விளக்கங்களை இணையம் மற்றும் கைபேசிகள் மூலமாகவோ, நேரடியாகவோ, Online மூலமாகவோ இன்று எளிதாகப் பெற இயலுகிறது.

1950களில் பொருட்களை உற்பத்தி செய்யும் பெரும்பாலான நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவை ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஜப்பானில் தான் இருந்தன. இந்த நாடுகள் உற்பத்திக்குத் தேவையான உதிரிப் பாகங்களை மட்டும் மற்ற நாடுகளிலிருந்து செய்து கொண்டன. ஆனால், புதிய உலகமயமாதலுக்குப் பிறகு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவை உலகின் அனைத்து நாடுகளிலும் குறிப்பாக வளரும் நாடுகளில் அமைந்துள்ளன. பன்னாட்டு நிறுவனங்கள், இந்த வளரும் நாடுகளில் பொருட்களைத் தயாரித்தல் அல்லது assembly என தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன.

புதிய உலகமயமாதலின் விளைவாக பன்னாட்டு நிறுவனங்கள் அதிகவணிகத்தையும் அதிக இலாபத்தையும் அடைந்தன. உதாரணமாக, GE நிறுவனம் 1,33,000 பணியாளர்களை அமெரிக்காவில் கொண்டிருந்தது. ஆனால், மற்ற 60 நாடுகளில் அந்நிறுவனத்தின்மூலம் பணி செய்தவர்களின் எண்ணிக்கை 1,54,000 ஆகும். அந்த ஆண்டில் GE நிறுவனம் அமெரிக்காவில் 75 பில்லியன் டொலருக்கு வணிகம் செய்ததென்றால் மற்ற நாடுகளில் 83 பில்லியன் டொலருக்கும் மேலாக வணிகம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது என்கிறார் ஜெ.்.ப்ரி. மேலும், புதிய உலகமயமாதலுக்கு முன்பாக,1960இல் 5% மட்டுமே இலாப மீட்டிய பன்னாட்டு நிறுவனங்கள் இன்று 25% அளவிற்கு இலாப மீட்டுகின்றன.

1960இன் தொடக்கத்தில் ஆசிய நாடுகளான வட கொரியா, தைவான், ஹொங்கொங் போன்றவை உலகச் சந்தை வணிகத்தில் ஈடுபட ஆரம்பித்தன. அதாவது, அந்நிய முதலீட்டை தொழிற்சாலைகளில் குறிப்பாக ஏற்றுமதி செய்கிற பொருள் சார்ந்த வணிகம் செய்ய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றன.

1978இல் சீனா உலகமயமாதலைத் திறந்துவிட்டிருந்தது. அதன் மூலம்






நிதி, உலக வணிகம், அந்நிய முதலீடு எனத் தங்கள் தேசத்தை புதிய பொரு ளாதாரக் கொள்கை என்றழைத்துக் கொண்டு வரவேற்றது. அதே வழியை இந்தியா 1991இல் பின்பற்ற ஆரம்பித்தது. இப்போது உலகின் அனைத்து நாடுகளும் வணிகம், நிதி மற்றும் (பொருள்) உற்பத்தி என உலகமயமாதலின் மூலம் பிணைக்கப்பட்டுள்ளன.

புதிய உலகமயமாதலால் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைக் காட்டிலும் சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் வளரும் நாடுகள் அதிகம் பலனடைகின்றன என்கிறார் ஜெ.்.ப்ரி. ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் மட்டுமே பொருட்கள் உற்பத்தியையும் (Goods), சேவையையும் (Services) ஒரு காலத்தில் அளித்து வந்தன. ஆனால், இன்று வளரும் நாடுகளில் பொருள் உற்பத்தியையும் சேவைகளையும் செய்யும் அனைத்து வசதிகளும் வந்து விட்டன. மேலும் உற்பத்தி செய்த பொருட்களை High Income Economies மூலம் ஏற்றுமதி செய்து அதிக பொருளாதார வளர்ச்சியை இந்தியா, பிரேசில் போன்ற நாடுகள் பெறுகின்றன.

புதிய உலகமயமாக்குதலால்,உற்பத்தி, சேவை ஆகிய இரண்டும் குறைந்த சம்பளத்திற்குத் தொழிலாளிகள்கிடைக்கும் நாடுகளுக்கும், பொருள் தேவையிருக்கும் நாடுகளுக்கும் அனைத்து உற்பத்தி நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும்

**இப்போது உலகின் அனைத்து நாடுகளும் வணிகம், நிதி மற்றும் (பொருள்) உற்பத்தி என உலக மயமாதலின் மூலம் பிணைக்கப்பட்டுள்ளன. புதிய உலகமயமாதலால் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளைக் காட்டிலும் சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் வளரும் நாடுகள் அதிகம் பலனடைகின்றன என்கிறார் ஜெஃப்ரி.**

தொழிற்சாலைகள் இடம் பெயர்ந்ததால் அமெரிக்காவில் அதிக வேலை வாய்ப்பின்மையும் வருமானமும் குறைந்துள்ளன என்கிறார் ஜெ.்.ப்ரி சாக்ஸ்.

1998-2009 காலகட்டத்தில், அமெரிக்காவில் 2 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பின்மை ஏற்பட்டது. டிசம்பர் 2010 ஆம் ஆண்டின் கணக்கின் படி, 19.3% பேர் வேலை வாய்ப்பின்றியோ, அல்லது பகுதி நேரப் பணி மட்டுமே செய்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பாக 8.3% பேர் வேலை வாய்ப்பின்றி இருந்தனர். இன்று அது இரு மடங்கிற்கும் மேலாக சென்றதற்கு முக்கிய காரணம் புதிய உலகமயமாக்கலே. பெரும்பாலான உற்பத்தி நிறுவனங்கள் சீனாவிலும் இந்தியாவிலும் உள்ளன. அமெரிக்காவில் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்து அதிக இலாபம் பார்க்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள்.

புதிய உலகமயமாதலுக்குப்பிறகு சீனாவின் வளர்ச்சி அபரிமிதமானது.

அது வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல. உலக அரசியலிலும் மிகப் பெரிய வளர்ச்சியை சீனா அடைந்துள்ளது. பொருட்களை விற்பதில் (purchasing power) சீனா ஜப்பானை 2001-லேயே சமன் செய்துவிட்டது. 2020இல் சீனா அமெரிக்காவைக் காட்டிலும் பொருளாதார வளர்ச்சியில் விஞ்சி விடும் என ஜெ.்.ப்ரி தெரிவிக்கிறார். உலக அரசியல் மாற்றங்களிலும் அனைத்து நாடுகளும் அமெரிக்காவைக் காட்டிலும் சீனாவுடன் உறவு கொள்வதையே விரும்பும். சீனா மிகப் பெரிய அரசியல் சக்தியாக 2020இல் விளங்கும் என்றும் குறிப்பிடுகிறார்.

புதிய உலகமயமாதலால் பலனடையப் போவது யார்?

அமெரிக்காவைக் காட்டிலும் சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் வளரும் நாடுகளே புதிய உலகமயமாதலால் பலனடைய மூன்று காரணங்களை முன்வைக்கிறார் ஜெ.்.ப்ரி.

Convergence Effect :பொருட்களைத் தயாரிப்பது, உற்பத்தி செய்வது போன்றவை உலகின் எல்லா நாடுகளிலும் அமையலாம் என்றான பிறகே இந்தியா, சீனா போன்ற நாடுகள் பெருமளவு இலாபமடைய ஆரம்பித்தன. குறிப்பாக சீனாவின் அந்நிய முதலீட்டுக் கொள்கை என்பது எந்த நிறுவனமாக இருந்தாலும் அதன் உற்பத்தியில் தங்கள் பங்கென்பது தொழில்நுட்பத்திலும்இருக்கும் என அமைத்துக்கொண்டுள்ளது. இதனால், குறுகிய காலத்தில் வெளிநாட்டுப்பொருட்களைப்பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டு, அதற்கு இணையாக புதுமையான முறையில் பொருட்களின் உற்பத்தியை சீனாவே செய்து வருகிறது.

Labour Effect : உலகின் பல நாடுகளும் தங்களின் பொருள் உற்பத்திக்கும், சேவைக்கும் குறைந்த சம்பளத்திற்கு பணியாட்களை நியமித்துக்கொண்டன.ஆகையால் பெருமளவிற்கு இந்தியா, சீனாவிலிருந்து பணியாட்கள் பல்வேறு நாடுகளுக்கு அழைத்து வரப்பட்டார்கள். உதாரணமாக, அமெரிக்காவில் உள்ள ஒருவருக்கு தர வேண்டிய நியாயமான சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதியையோ அதை விடக்குறைவாகவோ இந்தியா, சீனாவிலிருந்து வரவழைக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்தால் போது மென்ற சித்தாந்தத்தை பன்னாட்டு நிறுவனங்கள் கடைப்பிடிக்கஆரம்பித்தன.இதன் காரணமாகவே வேலைவாய்ப்பின்மை அமெரிக்கா, ஐரோப்பாவில் பெருகியுள்ளது.


Mobility Effect : தங்கள் நாட்டுக்கு வேலைக்கு பணியாளர்களை வரவழைத்து உற்பத்தி செய்வதைக் காட்டிலும் முதலீட்டை அந்தந்த நாடுகளில்செய்வது என்பதாக உலகமய மாதல் மாறிப்போனதும் காரணம். அதாவது எந்த நாட்டில் முதலீடு செய்கிறார்களோ அந்தநாட்டின்மக்களைக் கொண்டே தங்கள் உற்பத்தியைக் குறைந்த செலவில் செய்து,ஏற்றுமதி செய்து அதிகஇலாபத்திற்கு பொருட்களை விற்பதுவழக்கமானது. மேற்கூறிய மூன்று விடயங்களின் வாயிலாக நிச்சயமாக சீனா,இந்தியா மற்றும் சில வளரும் நாடுகள்தான் அதிக வெற்றியடையும். அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் முதலீட்டாளர்களே அதிக இலாபம் அடைகிறார்கள். ஆனால் ஒப்பீட்டளவில் வளரும் நாடுகளே அதிக பலனை அறுவடை செய்யும்.

தொழில்நுட்ப அறிவைப் பெற்றவர்களே இந்தப் போட்டியில் தங்களை எளிதாக நிலைநிறுத்த முடிகிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கத் தொழிலாளர்கள் அதிகமாகப்போட்டியைஎதிர்கொள்ளவேண்டிய அவசியமில்லாமல் இருந்தது. இன்று கல்வியறிவை, வளரும் நாடுகளைச்சேர்ந்தவர்கள் பெற்றுள்ளதால் பலத்தபோட்டியைஎதிர்கொள்ளவேண்டியுள்ளது. இன்று வெளிநாடுகளில் பணிபுரியச்செல்கின்ற அதிக திறமையானவர்கள் வசதி வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். எந்த ஒரு நேரத்திலும் 5,00,000 பேர் வானூர்தியில் பறந்து கொண்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது. தொழில்நுட்பத்திற்கும் உற்பத்தி சார்ந்து மட்டும் பொருளாதாரக்கொள்கைகளை வகுக்காது, வேளாண்மை மற்றும் ஏழ்மை மக்களும் பலன் பெறும் வகையிலும் அரசாங்கமும் சந்தையும் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலமே உலகமயமாதலை முழுமையாக வெற்றி பெறச் செய்ய இயலும்.

**இன்று எந்த ஒரு நேரத்திலும் 5,00,000 பேர் வானூர்தியில் பறந்து கொண்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது.**

# இந்தியா புலிகளுக்கு ஆயுதப்பயிற்சி; கோத்தாபய விசாரணை நடத்தலாம்

## - கூறுகின்றார் கேணல் ஹரிகரன்



(லண்டன்)

விடுதலைப் புலிகளுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சியளித்தது குறித்து சர்வதேச நாடுகள் விசாரிக்கவேண்டும் என்று கோருவதற்கு பதிலாக, அப்படியான விசாரணையை இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவே நடத்தலாம் என்று இந்திய அமைதிப்படையில் இலங்கையில் பணிபுரிந்த இந்திய இராணுவ அதிகாரியான கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறுதிப்போரின் போது நடந்த போர்க் குற்றங்கள் பற்றி விசாரிக்க வேண்டும் என்று கோரும் சர்வதேச நாடுகள், அப்படியானதொரு விசாரணையை, இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டு விடுதலைப்புலிகளுக்கு பயிற்சியளித்த காலத்திலிருந்து தொடங்கவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ கூறியிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அவரின் இந்தக் கோரிக்கையானது, இலங்கைக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அரசு மீது அதிகரித்துவரும் அழுத்தங்களை திசைதிருப்பும் ஒரு முயற்சியாகவே பார்க்கப்படும் என்று பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார் ஹரிகரன்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு மட்டுமல்லாமல், இலங்கையின் வேறுபல தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும்கூட 1980 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசு பயிற்சியளித்ததாக தெரிவித்த ஹரிகரன், அந்த பிரச்சினையெல்லாம் 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்படிக்கையுடன் முடிவுக்கு வந்துவிட்டதாக தெரிவித்தார்.

ஆனால் இப்போது சர்வதேச சமூகமும், ஐ.நா. மன்றமும் கோருவது 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரில் நடந்ததாகக் கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க வேண்டும் என்று தானே தவிர, 25 ஆண்டுகளுக்கு முன்பே முடிந்துபோன விவகாரங்களை அல்ல என்று கூறிய ஹரிகரன், அவற்றை விசாரிக்க வேண்டும் என்று உண்மையிலேயே கோத்தாபய ராஜபக்ஷ விரும்பினால் ஐ.நா.விடம் அதற்கான கோரிக்கையை முறையாக வைக்கலாம் என்றும், ஒரு வேளை ஐ.நா.வோ சர்வதேச நாடுகளோ இதை விசாரிக்க மறுத்தால், இலங்கை அரசாங்கமே அப்படியானதொரு விசாரணையை நடத்தலாம் என்றும் தெரிவித்தார்.

# இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரிக்கை

## – கோருகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

வடகொரியா அணு குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளும் பட்சத்தில் தென்கொரியாவிலுள்ள 40 ஆயிரம் இலங்கையர்கள் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் வாய்ப்புள்ளதனால் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தென்கொரியா மீது வடகொரியா அணுகுண்டை ஏவுமா? ஏவுமாயின் எப்போது ஏவும் என்பதுபற்றி எதுவும் நிச்சயமாக தெரியாது. எனினும், தென்கொரியாவிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படாது விடின் அவர்கள் அபாயத்தில் மாட்டிக்கொள்ளும் சாத்தியம் அதிகமாகவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடகொரிய தலைவர் கிம் யொங் அண் அணுகுண்டுத் தாக்குதலுக்கு உத்தரவிடுவாராயின் ஜப்பான், சீனா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு இது பெரும் ஆபத்தானதாக இருக்கும். அதுமட்டுமன்றி ஒரு உலக நெருக்கடியும் ஏற்படும்.

வட,தென் கொரிய நாடுகளுக்கு இடையில் அணு ஆயுத யுத்தம் ஏற்படின் இது வேறு நாடுகளுக்கும் ஆபத்தானதாகும்.

இதேசமயம் தமது நாட்டிலுள்ள வெளிநாட்டவர்கள் தமது பாதுகாப்பை கருதில்கொண்டு நாட்டை விட்டு வெளியேறுவது உசித்தமானது என்று தென்கொரியா கூறியுள்ளது. இந்நிலையிலேயே அங்குள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தென்கொரியாவிலுள்ள இலங்கையர் பாதுகாப்புடனேயே உள்ளனர்

## – வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

தென் கொரியாவிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் 'வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

தென் கொரியாவிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக பணியகத்தின் பிரதி இணைப்பதிகாரி மங்கள ரன்தெனிய குறிப்பிட்டார்.

அங்குள்ள இலங்கையர்களுக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அவர்களைக் காப்பாற்றுவதற்கும் பாதுகாப்பு இடங்களுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சர்வதேச அமைப்புக்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் அவை வெற்றியளித்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

தென் கொரியாவிலுள்ள இலங்கையர்கள் தொடர்பான பதிவுகள் அனைத்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக பணியகத்தின் பிரதி இணைப்பதிகாரி மங்கள ரன்தெனிய தெரிவித்தார்.

அவசர நிலைமைகளில் செயற்படும் விதம் தொடர்பில் அங்குள்ள இலங்கையர்களுக்கு அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்

# படகுப் பயணிகளை அனுப்புமாறு கோரிக்கை

(கொழும்பு)

படகுப் பயணிகளை திருப்பி அனுப்பிவைக்குமாறு அவுஸ்ரேலியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் அவுஸ்ரேலியாவின் திட்டம் வரவேற்கப்படவேண்டியது என அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எந்தவொரு புகலிடக்கோரிகையாளர் படகையும் அவுஸ்ரேலியா திருப்பி அனுப்பினால் அதனை வரவேற்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய அரசாங்கம் படகுகளை திருப்பி அனுப்பினால் குறிப்பிட்ட ஓர் இடத்தில் அந்தப் படகுகளை பொறுப்பேற்றுக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை மிகவும் எளிமையான முறைமைகள் எனவும் எந்த நேரத்திலும் இந்தத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்கா கோரிக்கை நிராகரித்தது அரசு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றச் செயல் தொடர்பில் இராணுவத்தினர் நடத்திய விசாரணை அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிசேன் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

1957 ஆம் ஆண்டு இராணுவ சட்டத்தின் அடிப்படையில் எந்தவொரு விசாரணை அறிக்கையையும் பகிரங்கப்படுத்துவது சட்ட ரீதியில் குற்றமாகும். இவ்வாறு அறிக்கைகளை வெளியிடத் தொடங்கினால் ஆயிரக்கணக்கான விசாரணை அறிக்கையை வெளியிட நேரிடும் என உயர் இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது இராணுவத்தினரின் ஒழுக்கம் தொடர்பில் சர்ச்சைகளை ஏற்படுத்தக் கூடுமென தெரிவித்துள்ளார். இதனால் இராணுவ விசாரணை அறிக்கைகளை பகிரங்கப்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்தும் அமுலாகவில்லை பரிந்துரைகள்

## அதிருப்தி கொள்கிறது ஐ.தே.க

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் 500 மில்லியன் ரூபாவினை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவ்வளவு பாரிய தொகை பணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், இதுவரையில் எவ்வித பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத்தை திருப்திபடுத்தும் நோக்கில் இவ்வாறு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் வெளியிடப்பட்டு ஓராண்டு கடந்துள்ள நிலையில் அரசாங்கம் காத்திரமான எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் 285 பரிந்துரைகளில் 133 பரிந்துரைகள் மட்டுமே தேசிய செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்கான தூதுவர்களாகவும், உயர்ஸ்தானிகர்களாகவும் முன்னாள் படையதிகாரிகளை நியமிப்பது ஆரோக்கியமானதாகாது என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கைகள் திருப்தி அடையும் வகையில் அமையவில்லை என ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# மனித உரிமை மீறல்கள் குறித்து இந்தியாவைக் கண்டிக்கும் சம்பிக்க

(கொழும்பு)


இலங்கை மீது குற்றம் சுமத்துவதற்கு முன்னர் காஷ்மீரில் 93 ஆயிரம் பேர் காணாமற்போனமை அடங்கலாக இந்திய மக்களின் மனித உரிமை மீறப்பட்ட பிரச்சினையை இந்தியா கவனிக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய நாடாளுமன்ற குழு நல்ல நோக்குடன் வருகை தந்திருந்தால் அதனை வரவேற்கலாம். ஆனால், இந்த விஜயம் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் எதிர்ப்பு இயக்கத்தின் ஒருபகுதி என்பதனை எம்மால் காணமுடிந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வின் போது நந்திக்கடலில் நடந்தவை உட்பட யுத்தத்தின் இறுதிக்கட்டம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்த வேண்டுமென இந்தியா கூறியிருந்தது.

ஆனால், இந்த மக்களின் உரிமைகள் மீறப்பட்டவில்லை. அவர்கள் சுதந்திரமாகவே வாழ்ந்து வருகின்றனர் என்பதனை இங்கு வந்திருக்கின்ற இந்திய நாடாளுமன்ற குழு அறிந்து கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது இலங்கையோடு நிற்கப் போவதில்லை. தனது சொந்த மனித உரிமை மீறல்கள் விடயத்தில் கவனத்தில் எடுக்காத இந்தியாவுக்கு எதிராகவும் இது திரும்பும்.



ஆகவே, முதலில் உங்களுடைய பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுங்கள் என்று இந்தியாவுக்கு நாம் கூறுகின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து
# பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்

(தென்மராட்சி)

உள்ளூர் உற்பத்திகளை மேம்பாடு அடையச்செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்குரிய சந்தை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதனூடாக எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்ப முடியுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்திக்கான புத்தாண்டுச் சந்தையினை திறந்து 'வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பிரதேசங்களில் உருவாக்கப்படும் உற்பத்திப் பொருடகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் பொருட்கள் தரம் வாய்ந்தவையாகவும் மலிவான விலையிலும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் இவ்வாறான உற்பத்திகளை ஊக்குவிப்பதனூடாக எமது பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்தினையும் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையச்செய்ய முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி.சாந்தசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரன், யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைபபாளர் ரகுநாதன், தென்மராட்சி சமுர்த்தி முகாமையாளர் அன்ரனி மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாடகத்துறை மாணவர்களுக்கான அரங்கத்திறன் பயிற்சிப் பட்டறை



(சுழிபுரம்)

சுழிபுரம் - விக்டோறியாக் கல்லூரி மாணவர்களுக்கான அரங்கத்திறன் விருத்திநாடகப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு சுழிபுரம் விக்டோறியாக்கல்லூரி அழகியல்துறை மண்டபத்தில் கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் (ஐ.ரி.எம்) நடாத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறை நிகழ்வின் வளவாளர்களாக, புத்தாக்க அரங்க இயக்கப் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாடகத் துறை ஆசிரியருமான எஸ்.ரி.குமரன் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரி.அருள்குமரன், ஆற்றுகையாளர் த. தயானிஷன், பா. கவிராஜ் இ.பகிதரன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப் பட்டறையை திறம்பட வழி நடாத்தினார்கள்.

இப்பயிற்சிப் பட்டறையில் தரம் 10, தரம் 11 நாடகத்துறை மாணவர்களுக்காக நடத்தப்பட்டதுடன், இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்கள், மிகவும் பயனுள்ள முறையில் இப்பயிற்ச்சிப்பட்டறையானது அமைந்திருந்ததுடன் புதிய அனுபவங்களையும் அரங்கியல் சார் நுட்பங்களையும் அறிந்து கொள்ள முடிந்துள்ளதாகத் தெரிவித்தனர்

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 23 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் 25 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும், 26 ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(43)

## பொய்யுள்



மூலபாரதி

### எதார்த்தமில்லை!

ஆக்கள் இல்லாக் கிரகத்தில்
ஆட்சி நடத்தும் கனவுகளே
ஏக்கம் ஒன்றைக் கொண்டுமே
இங்கே வளர்த்து சென்றிடும்

சட்டம், திட்டம் கடந்துமே
சட்டவாக்கம் செய்தனர்!
எட்ட முடியா இடத்ததில்
இருக்கும் அம்புலிக் கதையாகும்!

எதார்த்தம் இல்லா ஆட்சிக்கு
எவனோ ஒருவன் அதிகாரி
பதார்த்தம் ஆகவும் கைகளில்
படைப்பின் சிறுபசி தீர்ந்திடும்!

## குருபூசைத் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை குருபூசை தினவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரதம விருந்தினராகவும், ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி பா.ரகுநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (109)

## முரசின் இன்றைய பலன்

(12.04.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 30 ஆம் திகதி.
நட்சத்திரம் பரணி பின்இரவு 1.16 வரை. திதி துதியை
பிற்பகல் 5.31 வரை. இராகுகாலம் 10.36 - 12.06 வரை.
சுபநேரம் 06.06 - 7.36 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் இருந்த குழப்பங்கள் அகலும். எதிர்மனப்பாங்கு உள்ளவரை விலக்குவீர்கள். தொழில், உங்கள் முயற்சிக்கு நன்மை கிடைக்கும். உபரி வரவில் மகிழ்வீர்கள். உங்கள் உதவி மனப்பான்மைக்கு பாராட்டுக் கிடைக்கும். போக்குவரத்தில் கவனம். |
| ரிஷபம் | உற்சாக மனதுடன் இனிய வார்த்தை பேசுவீர்கள். நண்பர், உறவினரிடம் அதிக மரியாதை கிடைக்கும். தொழில், வளர்ச்சி திருப்திகரம். உபரி வருமானம் வரும். வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் அதிக நேரம். அன்பில் மகிழ்வீர்கள். |
| மிதுனம் | திட்டமிட்ட பணியில், மாற்றம் செய்ய நேரிடலாம். நண்பரிடம் கருத்து வேறுபாடு வரும் கவனமாக நடக்கவும். தொழில் இடையூறு சரி செய்வீர்கள். புதிய செலவு ஏற்படும். போக்குவரத்தில் கவனம். எதிர்பார்த்த ஒன்றை தொடங்குவதில் தாமதம். |
| கடகம் | எந்த விஷயத்திலும் மேம்போக்காக இருப்பீர்கள். இதனால், சிரம சூழ்நிலை வரலாம். கவனம் தேவை. தொழில், சுமாரான அளவில். சராசரி பணவரவு. கண்டதையும் உண்ண வேண்டாம். பெற்றோரின் ஆசி நிம்மதி ஏற்படுத்தும். குடும்ப ஆதரவு சுகம். |
| சிம்மம் | உங்களைப் பற்றித் தெரியாமல், சிலர் அவதூறு பேசுவர். சொந்த வேலையில் கவனம் கொள்வது நல்லது. தொழிலில் அபிவிருத்தி வேலையை பின் ஒரு நாளில் தொடங்கலாம். பணவரவு சுமாரான அளவில். உடல்நலத்திற்கு சிகிச்சை. |
| கன்னி | பெருந்தன்மை குணத்துடன் செயல்படுவீர்கள். ஆதாய பலன் பெற வாய்ப்பு. தொழில் அபிவிருத்தி அடையும். அதிக பணவரவில் எதிர்காலத்திற்கு சேமிப்பீர்கள். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளாலும் பெருமை. |
| துலாம் | ஆரவாரம் இல்லாமல் நடந்து கொள்வது நல்லது. குடும்பத்தினரின் ஆலோசனை நல்வழி தரும். தொழில் சராசரி அளவில். வரவை விட செலவு அதிகரிக்கும். உடல்நலத்திற்கு உணவில் கவனம். சீண்டப்படும் சூழலில் உங்கள் பொறுமை காக்கும். |
| விருச்சிகம் | நண்பர், உறவினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். வெற்றிகள் பெற அனுகூல சூழ்நிலை. தொழில், புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும். பணவரவும், நன்மையும் கூடும். முக்கிய வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். இல்லத்தில் சந்தோஷம் நிறையும். |
| தனுசு | இனிய நினைவுகளால் மனதில் மகிழ்ச்சி. இயலாதவருக்கு, முழந்தவரை உதவி புரிவீர்கள். தொழில, முன்னேற்றம் ஏற்படும். தாராள பணவரவு. அரசு தொடர்பான அனுகூலம் வந்து சேரும். குறை சொன்ன உறவினரும் உங்களைப் புரிந்துகொள்வர். |
| மகரம் | மனதில் கலைரசனை. நண்பரின் உதவியால், நன்மை பெறுவீர்கள். தொழில், புதிய பரிமாணம் ஏற்படும். கூடுதல் இலாபம் கிடைக்கும். குடும்பத்தினருடன் வழிபாடு. வெளியூரிலிருந்து நற்செய்தி. உறவினர் தேழ வருவர். விருந்துபசரித்து மகிழ்வீர்கள். |
| கும்பம் | எதிர்கால நலன் பற்றிய அக்கறை வளரும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொண்டால் ஏமாற்றம் தவிர்க்கலாம். தொழில், முயற்சியால் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். சேமிப்பு செலவுக்கு ஆகும். விலை உயர்ந்த பொருள்கள் கவனம். |
| மீனம் | செயல்களில் நேர்த்தியும், புதிய பரிமளிப்பும். போட்டி, பந்தயத்தில் வெற்றி வாய்ப்பு. தொழில் வளர, செய்ய வேண்டியதை நிறைவேற்றுவீர்கள். பணவரவு திருப்திகரம். குடும்பத்தில், மங்கல நிகழ்ச்சி நடத்த திட்டம். எல்லாம் சுபமாக முழயும். |

# அனுபவம் புதுமை அவனிடம் கண்டேன்

(மும்பை)

பொண்டிங் தலைமையில் ஆடுவது புதிய அனுபவம். அணியை வழிநடத்துவதில் அவர் சிறந்தவர் என மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் தினேஷ் கார்த்திக் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு இதுவரை எனது துடுப்பாட்டம் சிறப்பாக உள்ளது. உள்ளூர் போட்டி சீசனில் கணிசமாக ஓட்டங்கள் குவித்தது நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இந்த சிறப்பான ஆட்டம், ஐ.பி.எல். தொடரிலும் தொடர்வது மகிழ்ச்சி அளிக்கிறது. மும்பை இந்தியன்ஸ் அணி என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்ப, அதிக ஓட்டங்கள் குவித்து அணியின் வெற்றிக்கு உதவ வேண்டும் என்பதே எனது விருப்பம். தொடக்கத்திலேயே பொண்டிங், சச்சின் ஆகியோரின் விக்கெட்டுக்கள் வீழ்ந்தமைநெருக்கடியை ஏற்படுத்தியது.எனினும் நானும் ரோகித்தும் இணைந்து நல்ல இணைப்பாட்டத்தை அமைத்தால் அணியை மீட்க முடியும் என நம்பினேன். அதற்கு ஏற்ப ரோகித் உறுதுணையாக விளையாடி எனக்கு அதிக வாய்ப்பளித்தார். துடுப்பாட்ட வரிசையில் 3ஆவது வீரராகக் களமிறங்குவதை மிகவும் விரும்புகிறேன். அதனால் பவர்பிளே ஓவர்களில் அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவிக்க முடிகிறது. ஓரஞ்ச் தொப்பியை பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. மும்பை அணி கோப்பையை வென்றால் அதை விடவும் மகிழ்ச்சி அடைவேன். பொண்டிங் தலைமையில் விளையாடுவது புதிய அனுபவம். அவர் அணியை வழி நடத்துவதில் மிகவும் சிறப்பாக செயற்படுகிறார். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# 2ஆவது தாய் நாடு

இந்தியாவை எனது இரண்டாவது தாய் நாடாகக் கருதுகின்றேன். அந்தளவிற்கு இந்திய மக்களும், அதன் கலாசாரமும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது என பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

இந்திய கலாசாரம் எனக்குப் பிடித்துள்ளது. இங்குள்ள உபசரிப்பு என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. உலகில் வேறு எந்த நாட்டிலும் இப்படி உபசரிப்பு கிடைத்தது இல்லை. இந்தியாவில் உள்ள அனைவருமே மிகவும் அன்பானவர்கள். இந்தியாவை எனது 2ஆவது தாய் நாடாக கருதுகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னரே ஆரம்பியுங்கள்

அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். ருவென்ரி–20 கிரிக்கெட் போட்டியை 1 மாதத்திற்கு முன்னதாக ஆரம்பிக்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபையிடம் இங்கிலாந்து கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. தங்கள் நாட்டு வீரர்கள் ஐ.பி.எல்.லில் பங்கேற்கும் வகையில் இந்தப்போட்டியை முன்னதாக நடத்த வேண்டும் என்பதை இங்கிலாந்து கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி டேவிட் கோலியர் வலியுறுத்தியுள்ளார். ஐ.பி.எல். தொடரில் கெவின் பீற்றர்சனைத் தவிர வேறு எந்த இங்கிலாந்து வீரர்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தடையுத்தரவு நீக்கம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் பதவியை வகித்தல் மற்றும் கிரிக்கெட் தேர்தலின் போது செயலாளர் பதவிக்கு போட்டியிடல் என்பவற்றைத் தடுக்கும் வகையில் நிஷாந்த ரணதுங்கவிற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவு கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தினால் நீக்கப்பட்டுள்ளது. நிஷாந்த ரணதுங்க தாக்கல் செய்திருந்த மனு மற்றும் சத்தியக் கடதாசியை கருத்திற்கொண்டு நீதிமன்றம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. தனக்கெதிராக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிப்பதற்காக கடந்த வியாழக்கிழமை நிஷாந்த டி சில்வா முன்வைத்த விடயங்கள் உண்மைக்குப்புறம்பானவை என நிஷாந்த ரணதுங்க தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. விடயங்களை ஆராய்ந்த மாவட்ட நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ,நிஷாந்த ரணதுங்கவிற்கு எதிராக விதித்திருந்த இடைக்காலத் தடையுத்தரவை நீக்கியதுடன், மனு மீதான விசாரணைகள் இம்மாதம் 18 ஆம் திகதி மீண்டும் இடம்பெறுமென அறிவித்தார்.

# ஆலோசகராக இணைவு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சக்லைன் முஷ்டாக் மீண்டும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சு தொடர்பான ஆலோசகராக இணைந்து கொள்ளவுள்ளார். சிம்பாப்வே அணியுடன் இடம்பெறவுள்ள போட்டிகளின் போது அவர் ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்குவார்எனக்கூறப்படுகின்றது. முதற்கட்டமாக, எதிர்வரும் நூறு நாட்களுக்கு சக்லைன் முஷ்டாக்குடன் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இணக்கப்பாடுகளை எட்டியுள்ளது. ருவென்ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் கடந்த வருடம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பங்களாதேஷ் அணியுடன் சக்லைன் முஷ்டாக் இணைந்து செயற்பட்டிருந்தார்.




# பீற்றர்சன் அராஜகப் பேர் வழி




(லண்டன்)

விஸ்டன் இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் மீண்டும் பீற்றர்சன் ஒரு அராஜ பேர்வழி என்று ஆணியறையப்பட்டுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டின் புனித நூலாகப் போற்றப்படும் விஸ்டன் இதழின் 150ஆவது ஆண்டு சிறப்புப் பதிப்பு (1500 பக்கம், ஸி4,150) நேற்று முன்தினம் வெளியானது. 1863ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த இதழ், 2ஆம் உலகப் போரின்போதும் கூட எந்தவித தடையும் இன்றி தொடர்ந்து வெளியானது குறிப்பிடத்தக்கது. இந்த இதழ் சார்பில் ஆண்டின் சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்படுவதை, கிரிக்கெட் வீரர்கள் தங்களுக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகின்றனர்.இதன் ஆசிரியர் தலையங்கத்தில் பீற்றர்சன் குறித்து மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிரிக்கெட் ஆட்டம் என்பது ஏதோ பீற்றர்சனின் ஆர்வச் சபலங்களின் நீட்சி போல் சிலரை நினைக்க வைத்துள்ளது அவரது நடத்தை. ஐ.பி.எல். கிரிக்கெட்டின் பணத்திமிர் அவர் இங்கிலாந்தின் மைய ஒப்பந்தத்தின் மீதே புல்டோசர் ஓட்டச் செய்துள்ளது. அவர் சுய பச்சாதாபம் பிடித்தவர், தன்னை கவனிப்பதேயில்லை என்று கருதுகிறார். இத்தனைக்கும் தென்னாபிரிக்க வீரர்களுக்கு முட்டாள்தனமான குறுஞ்செய்தியை அனுப்பியவர்தான் இந்த பீற்றர்சன்' என்று கடுமையாக அந்த எடிட்டோரியல் சாடியுள்ளது.இது தவிர கடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் பீற்றர்சன் சர்ச்சைகளில் சிக்கியது பற்றி இந்த ஆசிரியர் தலையங்கத்தில் கீழ்வருமாறு சாடியுள்ளது: இங்கிலாந்து ஓய்வறையில் உள்ள வீரர்களுக்கு மட்டுமே தெரியும் பீற்றர்சன் எவ்வளவு பிரச்சினைக்குரிய நபராக இருந்தார் என்று.

ருவென்ரி–20 பணமழை கிரிக்கெட்டிற்கு டெஸ்ட் கிரிக்கெட்டை விட அதிக முக்கியத்துவம் அவர் கொடுப்பது நன்றாகவேயில்லை. இத்தனைக்கும் டெஸ்ட் கிரிக்கெட் மூலம்தான் பீற்றர்சன் பெரிதும் அறியப்படுகிறார். எப்போதும் ஓவர் கிரிக்கெட் என்கிறார். ஆனால் ஐ.பி.எல். பற்றி மூச்சு விடுவதில்லை என்று அந்த ஆசிரியர் தலையங்கத்தில் பீற்றர்சனை சாடியுள்ளது.

# கெய்ல் அதிரடி; பணிந்தது கொல்கத்தா



(பெங்களூர்)

கிறிஸ் கெய்லின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி–20 கிரிக்கெட் தொடரின் 12ஆவது ஆட்டம் நேற்று பெங்களூரில் நடைபெற்றது.

இதில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலாவது ஓவரில் மூன்று ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் விக்கெட் சாய்க்கப்பட்டது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த கலிஸ், கம்பீருடன் இணைந்து பொறுப்பாக ஆடினார். இந்த ஜோடி மிகவும் சிறப்பான முறையில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தது. 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய அதிரடி வீரர் யூசுப் பதான் களத்தில் சிறிது நேரம் தாக்குப்பிடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக உயர்த்தினார். ஒரு புறம் கப்டன் கம்பீர் நிதானமாக ஆடி அணியை ஸ்திரப்படுத்த முயன்றார். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த இணை 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் விக்கெட்டுக்கள் ஒரு சீரான இடைவெளியில் சாய்க்கப்பட்டது. இறுதியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.இதில் கப்டன் கம்பீர் 46 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 59, யூசுப் பதான் 17 பந்துகளில் ஒரு சிக்ஸர் மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 27, கலிஸ் 16, மனோஜ் திவாரி 16 பந்துகளில் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆர்.பி.சிங் மூன்று, வினாய் குமார், கன்றியூஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. 12 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அகர்வால் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து களமிறங்கிய கப்டன் ஹோலி கிறிஸ் கெய்லுடன் இணைந்தார். இந்த ஜோடி கொல்கத்தா நைட் ரைடர்ஸின் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்து சிக்ஸர்கள், பவுண்டரிகளாக விளாசியதுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஜெட் வேகத்தில் உயர்த்தினர். இருப்பினும் இந்த ஜோடி 63 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய டிவில்லியர்ஸ் கிறிஸ் கெய்லுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நிதானமாக ஆடினார். மறுபுறத்தில் அதிரடியில் அசத்திய கிறிஸ் கெய்ல் சிக்ஸர் மழை பொழிந்து அணியின் வெற்றியை இலகுபடுத்தி உறுதி செய்தார். இறுதியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 17.3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் 50 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 85, கப்டன் விராட் ஹோலி 27 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 35, டிவில்லியர்ஸ் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாலாஜி ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கிறிஸ் கெய்ல் தெரிவானார்.




இதேவேளை, நேற்றைய ஆட்டத்தின் போது கப்டன் ஹோலி, கப்டன் கம்பீர் ஆகியோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேலணை ஐயனார் மெய்வல்லுநர் பாண்டியன் இல்லம் முதலிடம்







(வேலணை),

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பாண்டியன் இல்லம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பாண்டியன், சேரன், சோழன் என மூன்று இல்லங்களாக வீர,வீராங்கனைகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. பாண்டியன் இல்லம் 210புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், சேரன் இல்லம் 189 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், சோழன் இல்லம் 172 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. வித்தியாலய அதிபர் திருமதி பு. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (21)

# தனபாலன் நினைவு கிரிக்கெட் விரைவில் சென். ஜோண்ஸில்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரியினால் நடத்தப்படும் எஸ்.தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையில் இடம்பெறும் இப்போட்டி அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடர் சென். ஜோண்ஸ் கல்லூரியினால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டுக்கான போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி சென். ஜோண்ஸ் கல்லூரிமைதானத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து, அரையிறுதி, இறுதிப்போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சென். ஜோண்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் இந்த வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் தொடர் கடந்த ஆறு வருடங்களாக தொடர்ந்து நடத்தப்பட்டுள்ளன.

ஏழாவது வருடமாக இடம்பெறவுள்ள இப்போட்டித் தொடர் சிறப்பான முறையில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகபோட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி கடந்த மூன்று வருடங்களிலும் கிண்ணத்தை வென்று முன்னிலையிலுள்ள அதேவேளை,சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டு முறையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு முறையில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# சிறப்புற நடைபெற்ற முன்பள்ளி விளையாட்டு

(வரணி)

வடக்கு வரணி கௌரிபாலன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற நடைபெற்றது. இதில் பார்ப்போர் கண்களைக் கவரும் வகையில் சிறார்களின் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌவித்தார். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர்கள்,ஊர்பெரியோர், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறார்களுக்கு உற்சாகமூட்டினர்.




# புதுவருடத்தை முன்னிட்டு கால்பந்துப் போட்டி

(வேலணை)

புதுவருட தினத்தை முன்னிட்டு வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (21)

# கிரிக்கெட் வீரர்களுக்கான விதி அமுலாக்கியது யாழ். கிரிக்கெட் சங்கம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட கிரிக்கெட் வீரர்களுக்கான விதி முறை கள் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதிகள் வருமாறு,

மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்கள் தமது அணிகளின் துடுப்பாட்ட வீரர்களின் பெயர்ப் பட்டியலை தவறாது சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுதல்,

சங்கத்தின் அனுமதியுடன் நடைபெறும் சகல சுற்றுப் போட்டி ஆட்டங்களிலும் தமது கழக அணிகளின் விளையாடும் வீரர்களின் பெயர்ப்பட்டியல் தங்களின் கழகத்தின் சார்பில் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை கழகங்கள் தவறாது உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். முறையாகப் பெயர்ப் பதிவு செய்யாத வீரரை சுற்றுப் போட்டி ஆட்டங்களில் தமது அணியில் சேர்த்துக்கொள்வது நடவடிக்கைக்குரிய குற்றமாகக் கருதப் படும்.

ஒரு கழகத்தின் சார்பில் பெயர் பதிவு செய்துள்ள வீரர் அக்கழகத்திலிருந்து விலக விரும்பின் அது குறித்து எழுத்து மூலம் அக்கழகத்தின் செயலாளருக்கும், மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளருக்கும் அறிவிக்க வேண்டும்.

அத்தகைய எழுத்து மூல அறிவித்தலை சம்பந்தப்பட்ட கழகச் செயலாளர் ஏற்று, உறுதிப்படுத்துவாராயின் அக்கழகச் செயலாளர் ஒப்பமிட்ட திகதியில் இருந்து மூன்று மாத காலத்திற்குப் பின்னர் பிறிதொரு கழகத்தின் சார்பில் விளையாடுவதற்காகப் பெயர்ப்பதிவு செய்யும் தகுதியை அந்த வீரருக்கு சங்கம் வழங்கும். அதற்கு முன்னர் பிறிதொரு கழகத்தின் சார்பில் அவரது பெயரைப் பதிவு செய்ய முடியாது.

வீரரின் எழுத்து மூல விலகல் அறிவித்தல், சம்பந்தப்பட்ட கழகச் செயலாளரினால்உறுதிப்படுத் தப்டாதவிடத்து அவரது விலகல் கடிதம் கிடைத்த திகதியில் இருந்து ஆறு மாத காலத்தின் பின்னர் பிறிதொரு கழகத்தின் சார்பில் விளையாடுவதற்காக அவரது பெயரை மற்றைய கழகம் பதிவு செய்ய முடியும்.

இதேபோன்று, கழகம் ஒன்று தனது சார்பில் விளையாடி பதிவு செய்த வீரர் ஒருவரின் பெயரை தனது பட்டியலில் இருந்து நீக்குவதாக எழுத்து மூலம் சங்கத்திற்கு அறிவிக்கு மாயின், அத்திகதியிலிருந்து மூன்று மாதத்தின் பின்னர் அந்த வீரரின் பெயரை இன்னொரு கழகம் தனது வீரர் பட்டியலில் பதிவு செய்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எஸ்.பி.)

# பிரதேச மட்ட எல்லே
## சுழிபுரம் விக்ரோரியன்ஸ் சம்பியன்

(அராலி)

சங்கானை பிரதேச மட்ட எல்லேப் போட்டியில் சுழிபுரம் விக்ரோரியன்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

சங்கானைப் பிரதேச மட்ட பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான எல்லே போட்டி அண்மையில் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் சங்கானைப் பிரதேசத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குபற்றியபோதும், இதன் இறுதிப் போட்டிக்கு சுழிபுரம் விக்ரோரியன்ஸ் அணியும், அராலி நிலாவெளி அணியும் தகுதி பெற்றன.

ஆரம்பம் முதலே சுழிபுரம் விக்ரோரியன்ஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. இதில் கஜே, நிதர்சன் ஆகியோர் சிறப்பான முறையில் செயற்பட்டு அணிக்கு அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்ததுடன் வெற்றியையும் உறுதி செய்தனர். இறுதி யில் சுழிபுரம் விக்ரோரியன்ஸ் அணி 7-3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியைக் காணலாம். இப்போட்டியில் சம்பியன் பட்டத்தை மருதனார்மடம் இராமநாதன் பெண்கள் கல்லூரி அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (93)


# கே.சி.சி.சி.யின் கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் நாள் ஆட்டத்தில் ஸ்ரீ காமாட்சி, நியூஸ்ரார் அணிகள் வெற்றி பெற்றன. இந்நிலையில் இரண்டாம்நாள் ஆட்டம் நாளைய தினம் இடம்பெறவுள்ளதாகவும், இதில் காலை, மாலை என இரண்டு ஆட்டங்கள் இடம்பெறும்எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த முன்னணி அணிகள் பல பங்குகொள்கின்றன. இது 30 ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இன்னும் ஏன் அகதிமுகாம்?



தமிழ்நாட்டிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற இலங்கை அகதிகள் 120 பேர் நடுக்கடலில் மீட்கப்பட்டு, நாகையில் ஒரு மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலியா சென்ற சில மாதங்களிலேயே தங்களுக்குக் குடியுரிமை கிடைத்துவிடும் என்பதால் வாழ்வு தேடித் தப்பிச் செல்ல முற்பட்டதாகவும், இங்கே படித்துப் பட்டம் பெற்றாலும் கூட, இலங்கைத் தமிழர்களுக்கு அரசு வேலையும் கிடைப்பதில்லை, தனியார் அலுவலகங்களிலும் வேலை கிடைப்பதில்லை என்பதாலும் இந்த முடிவுக்கு வந்ததாக அவர்கள் அதிகாரிகளிடம் கூறியுள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள 132 முகாம்களில், தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் ஒரு இலட்சம் அகதிகளின் வாழ்க்கைச் சூழல் மிகவும் மோசமாக இருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இந்த அகதிகளுக்கு, மிகச் சிறிய அளவில் நிதியுதவியும் அரிசி, மண்ணெண்ணெய் ஆகியனவும் வழங்கப் படுகின்றன. அது மட்டுமே வாழ்க்கைக்குப் போதுமா? தமிழ்நாட்டில் ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு, இலங்கை அகதிகள் முகாம்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுவதும், சந்தேகத்துடன் பார்க்கப்படுவதுமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இலங்கை அகதிகளை, தமிழீழ ஆதரவுப் போராட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொண்ட தமிழக அரசியல் கட்சிகள், அவர்களது வாழ்வாதாரம் குறித்துப் பெரிதும் பேசியதில்லை என்பதும் நிலைமை மோசமானதற்கு இன்னொரு காரணம். மேலும், அகதிகளை வைத்து வருவாய்த்துறை அலுவலர்கள் கொழித்தனர் என்பது மற்றுமொரு கசப்பான உண்மை. இவர்களுக்கான நிதியுதவியில் கையாடல் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் எத்தனை இலங்கை அகதிகள் இருக்கிறார்கள், முகாமைவிட்டு வெளியேறித் திரும்பாதவர்கள் எத்தனை பேர் என்ற புள்ளிவிவரம்கூட முறையாக இல்லாத நிலையில்தான் வருவாய்த்துறை இருக்கிறது.

அவுஸ்திரேலியா செல்ல முயன்ற இலங்கை அகதிகளை நடுக்கடலில் இருந்து அழைத்து வந்து, இருபத்து நான்கு மணி நேரத்துக்கும் மேலாக, இவர்களை என்ன செய்வது என்று தெரியாமல், நாகையில் ஒரு மண்டபத்திலேயே தங்க வைத்திருக்கும் அரசு அதிகாரிகளின் நோக்கம் என்ன? இவர்களில் பல்வேறு முகாம்களைச் சேர்ந்தவர்கள் 75 பேரை மட்டுமே நீதிபதி முன்பாக ஆஜர்படுத்தினர். மற்றவர்களை ஏன் நீதிமன்றத்துக்கு அழைத்துவரவில்லை?

காரணம், இவர்கள் தங்கள் முகாம்களைவிட்டு வெளியேறி பல நாள்களாகியும், இவர்களது பெயர் இன்னும் நீக்கப்படாமல் இருக்கக்கூடும். ஆகவே அதை சரி செய்வதற்காக நடவடிக்கையைத் தாமதப்படுத்துகிறார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இவர்களில் பலர் அகதிகள் அல்ல, இந்தியர்கள்தான் என்பதாகக்கூட இருக்கலாம். "இலங்கை அகதிகள்" என்ற போர்வையில் அவுஸ்ரேலியாவிலும், கனடாவிலும் தஞ்சம் அடைந்து பிறகு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முற்பட்டவர்களும் சரி, இந்தியாவில் சொந்தங்களும், சொத்துகளும் உள்ளவர்களாய், முகாம்களுக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்களும் சரி, தொழில்செய்து வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது, ஏழை இலங்கை அகதிகள் மட்டும் சிறைக்கைதிகள் போல வாழும் நிலைமை எந்த வகையிலும் நியாயமற்றது.

வங்கதேச அகதிகளும், இலங்கை அகதிகளும் தொடர்ந்து இந்தியாவுக்குள் வந்து கொண்டே இருக்கிறார்கள். வங்கதேச அகதிகளில் பலர் அசாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாக மாறி, இந்தியர்களிலிருந்து பிரித்தறிய முடியாதபடி கலந்துவிடுகின்றனர். இந்தியாவில் பணம் கொடுத்தால் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவது சிரமம் அல்ல என்பதால், அந்த வாக்கு வங்கியை அசாம் மாநில அரசியல்வாதிகள் தக்க வைத்துக்கொண்டுள்ளனர்.

அதெல்லாம் போகட்டும், ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் தமிழக அரசியல் கட்சிகளில் ஏதாவது ஒரு கட்சி, முகாம்களில் வாழும் இலங்கை அகதிகள் பற்றிக் கவலைப்பட்டதுண்டா? குறைந்தபட்சம் ஏதாவது ஒரு அகதி முகாமுக்கு அந்தக் கட்சிகளின் தலைவர்கள் போனதுண்டா? போக மாட்டார்கள். காரணம், இலங்கை அகதிகள் வங்கதேச அகதிகள்போல இவர்களுக்கு வாக்கு வங்கிகளாகப் பயன்பட மாட்டார்கள். அவர்களால் இவர்களுக்கு அரசியல் ஆதாயமும் கிடையாது.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களில் விருப்பமுள்ளவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி விட்டு, இங்கேயே வாழ விரும்புகிறவர்களுக்கு, இரட்டைக் குடியுரிமை வழங்க முடியாத நிலையில், இந்தியக் குடியுரிமையேகூட அளித்துவிட நாம் பரிசீலிக்க வேண்டும்.

இனியும் தமிழகத்தில் அகதிகள் முகாம்கள் தேவையில்லை!

**- தினமணி தலையங்கத்திலிருந்து**

# பிழையின்றித் தமிழ் 12

**- ஞானச்செல்வன் -**

மரபுவழிப்பட்ட செவிகளில் உறுத்தலாக ஏதாவது ஒலி கேட்டால் மனம் வருந்துகிறது. பேச்சாளர் சிலர் அறிஞ்சர், கலைஞ்சர் என்றோ, அறிநர், கலைநர் என்றோ உச்சரித்துப் பேசுகிறார்கள். காதில் வந்து தேள் கொட்டுவதுபோல் இருக்கும் அந்த நேரங்களில். சற்றே முயற்சி செய்தால் சரியாக உச்சரிக்க முடியும். முயற்சி செய்வார்களா?

(P)பம்பரத்தை (B)பம்பரம் என்றும் (k)குடிசையை (g)குடிசை என்றும் (k)கும்பல் (g)கும்பல் என்றும் (Poo)பூம்புகாரை (boo)பூம்புகார் என்றும் மிகப்பலர் ஒலிக்கிறார்கள். போல இருக்கும் (po)போலியை (bo) போலி என்றும், வேறொன்றும் இல்லாது காற்று (கால்) உள்ள இடத்தைக் காலி (ka) என்று சொல்லாமல் காலி (ga) என்பதும் கேட்கப் பொறுக்கவில்லை. உன்னால் (ba)பயனில்லை என்று பேசுவதைக் கேட்கும்போது நாம் என்ன எழுதி என்ன (pa)பயன் என்று எண்ணத் தோன்றுகிறது.

## மரியாதை அடைமொழிகள்:

மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மேதகு ஆளுநர் சந்திரசிறி, மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் - இவ்வெடுத்துக்காட்டுகள் மூன்றும் பிழையற்ற வாக்கிய அமைப்பை உடையவை. இவ்வமைப்பைச் சற்றே மாற்றி ஜனாதிபதி மேதகு மகிந்த ராஜபக்ஷ, ஆளுநர் மேதகு சந்திரசிறி, அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா என்றெழுதினால் இவை பொருட்பிழை கொண்ட வாக்கியங்களாகும்.

மேதகு எனில் "மேன்மை தங்கிய" என்று பொருள். மாண்புமிகு எனில் மாட்சிமை மிகுந்த எண்பது பொருள். ஆங்கில மொழியின் தாக்கத்தால் தமிழில் உருவாக்கப்பட்ட நல்ல தமிழ்ச் சொற்கள் இவை. கனம், மகாகனம் போன்ற சொற்கள் நாம் பயன்படுத்திய வட சொற்கள். இந்த மரியாதைக்குரிய அடைமொழிகள் அவற்றைத் தாங்குகின்ற பதவிப் பொறுப்புகளுக்கேயன்றி, பொறுப்புகளை ஏற்றுள்ள ஆள் (நபர்)களுக்கு அல்ல. பதவிப் பொறுப்புகள் பறி போகுமானால் அடைமொழி களும் போய்விடும். ஆதலின் மாண்புமிகு, மேதகு போன்ற ஆட்சிசார்ந்த அடைமொழிகளை ஒருவர் பெயரோடு சேர்த்து எழுதுகின்ற, பேசுகின்ற முறையை விட்டுவிடுக.

கீர்த்தி எனில் புகழ். கீர்த்தி எனும் வடசொல்லுக்கு நிகரான தூய தமிழ்ச் சொல் சீர்த்தி. உயர்ந்த பெருமைகளுக்கு உரியவரைப் பாராட்ட சீர்த்திமிகு எனும் அடை மொழியைப் பயன்படுத்தலாம். மிக்க புகழும், பெருமையும் உடையவர்களைப் பாராட்ட உயர்சீர்த்தி எனும் அடைமொழியைப் பயன்படுத்தலாம். இச்சொல் சங்க இலக்கியத்துள் காணப்படும் பழந்தமிழ்ச் சொல்.

துறவுநிலையில் மேன்மையுற்ற ஆதினங்கள், திருமடங்களின் தலைவர்கள் பெயருக்கு முன்னே ஸ்ரீ-ல-ஸ்ரீ என்று முன்னர் எழுதி வந்தோம். இப்போது நல்ல தமிழில் தவத்திரு என்றோ சீர்வளர் சீர் என்றோ சொல்லி வருகிறோம். தவத்திரு என்பதில் தவம் - தவநிலையைக் குறிப்பதோடு தவ என்னும் உரிச்சொல்லாக நின்று மிகுந்த எனும் பொருளையும் காண்க.




கிறித்துவப் பாதிரியார்கள் பெயர்களின் முன்னே அருள்திரு என்றோ அருள் தந்தை என்றோ அடைமொழி சேர்க்கப்பட்டு வருகிறது. சிலர் இவற்றை எழுதும்போது அருட்திரு என்றும், அருட்தந்தை என்றும் எழுது கிறார்கள். நிலை மொழி இறுதியில் லகர, ளகரம் இருப்பின் (ல்,ள்) வருமொழி முதலில் க,ச,த,ப வரும்போது இந்த ல்,ள் என்பவை ற், ட் ஆகத் திரியும் என்பது பொதுவிதி.

(எ-டு):- பல் + பொடி = பற்பொடி

முள் + செடி = முட்செடி

ஆனால் வருமொழி முதலில் தகரம் (த) வரின் அதுவும் றகர, டகரமாக மாறும் என்பது நுணுக்கமான ஒன்று.

(எ-டு):- புல் + தரை = புற்றரை

வாள் + தடங்கண் = வாட்டடங்கண்

மிகவும் கடினமாகப் போவதுபோல் தோன்றுகிறதா? சற்றே மனம் செலுத்துங்கள். எளிதில் புரியும்.

என்ன சொல்கிறோம் என்றால் அருட்தந்தை, அருட்திரு என எழுதுதல் பிழையாம். பின்? அருட்டந்தை, அருட்டிரு என எழுதுதல் பிழை யற்றதாம். எதற்கு வம்பு என்று எண்ணினால் இயல்பாக அருள்தந்தை,. அருள்திரு என்று எழுதிவிடுங்கள். இதில் பிழையில்லை.

# "பெருங்குடி" கவிஞர்கள்!

அந்தக் காலத்தில் கர்நாடக சங்கீதம் அல்லாமல் இந்துஸ்தானி மெட்டுக்கு ஏற்ற பொருத்தமான பாடல்கள் எழுதுவதில் மூவர்



தஞ்சை ராமையாதாஸ் கம்பதாசன்

புகழடைந்திருந்தனர். அவர்கள் தஞ்சை ராமையாதாஸ், கே.பி.காமாட்சி, கம்பதாசன் ஆகிய மூவர் தான். தேன் உண்ணும் வண்டு - மாமலரைக் கண்டு திரிந்தலைந்து பாடுவதேன் ரீங்காரம் கொண்டு - பூங்கொடியே நீ சொல்லுவாய்! இது கே.பி.காமாட்சி, இந்துஸ்தானி மெட்டுக்கு எழுதிய பிரபல பாடல்.

எந்த மொழி மெட்டுக்கும், "இன்ஸ்டண்ட்" பாடல்கள் எழுதுவதில் இணையற்று விளங்கிய இம்மூன்று கவிகளும், வேறொரு விஷயத்திலும் நிகரற்று திகழ்ந்தனர். மூவரோடு, "பெருங்குடி" மகனார். பாட்டில் மட்டுமல்ல; "பாட்டிலி"லும் மன்னர்கள்.

தொகையறாவுக்கு ஒரு பெக் பல்லவிக்கு இன்னொரு பெக் அனுபல்லவிக்கு அடுத்த பெக் சரணத்துக்கு கூடுதல் பெக்...


இவ்வாறு நான்கு ரவுண்டில், ஒரே நாளில் நான்கைந்து பாடல்கள் எழுதி, காசை வாங்கி பையில் போட்டு கிளம்பி விடுவர். வீட்டிற்கு அல்ல; விஸ்கி "பார்"- இற்கு. இன்பம், துன்பம் பாட்டெழுத வேண்டிய காட்சிச் சூழல் எப்படி இருந்தாலும், பாட்டெழுத படக் கம்பெனிக்கு வரும்போதே, ஒரு சப்பை பாட்டிலை சைட் பாக்கெட்டில் வைத்தபடி தான் வருவர்.

கவிதை எழுத இவர்களுக்கு காகிதம் வேண்டும் என்ற அவசியம் இல்லை. கலக்கிப் பருகுவதற்கு இரண்டு கோலி சோடாவும், ஒரு கண்ணாடி தம்ளரும், அவசரத்துக்கு நாலு அப்பளமும் கொடுத்து விட்டால் போதும். பாடிக் கொட்டி விட்டு, அடுத்த படக் கம்பெனிக்கு பறந்து விடுவர்.

இவர்கள் இன்னொரு கம்பெனிக்கு போய், காலிப் பையுடன் வருவர் என்பதை முன்கூட்டியே தெரிந்து வைத்திருக்கும் தயாரிப்பாளர், ஸ்பெஷல் விஸ்கி, ஸ்பென்சர் சோடா, உப்பில் ஊறப் போட்ட வடுமாங்காய் தயாராக வைத்திருப்பார். இந்த தொலு பொருட்களை பார்த்த உடனே, கவிகளுக்கு குஷி பிறிட்டு கிளம்பி, கோடை மழையாய் பாட்டு கொட்டத் தொடங்கும்.

பாவம்... சொல்லி வைத்தாற் போல் இம்மூன்று கவிஞர்களும், குடல் வெந்து புண்ணாகி, ஈரல் குலை துளை பாய்ந்து அழுகி, 50 வயது தாண்டியும், தாண்டாமலும், இரண்டுங்கெட்டான் நிலையில் இமைக் கதவுகளை மூடிக் கொண்டு இறைவனடி சேர்ந்தனர்.

("என் கரையைத் தொட்ட அலைகள்" நூலில் வசனகர்த்தா ஆரூர்தாஸ்.)



லண்டனைச் சேர்ந்த, பிரபலமான உடை வடிவமைப்பாளர், ஹென்றி ஹோலண்ட், உலகிலேயே, மிக நீளமான உடையை தயாரித்து, சாதனை படைத்துள்ளார். பெண்கள் அணியும், கவுன் வடிவிலான இந்த உடை, 1,500 சதுர அடி அகலமும், 150 அடி உயரமும் உடையது. லண்டனில் உள்ள, பிரபலமான ஷொப்பிங் மாலில், இந்த பிரமாண்ட உடையை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி நடந்தது. மொடல் அழகி, கோலெட் மார்ரெ, இந்த உடையை அணிந்து வந்தபோது, அங்கு கூடியிருந்தவர்கள், தங்கள் விழிகளை,

# பென்னம்பெரிய கவுன்!

ஆச்சரியத்தில் விரிய விட்டனர். முழுக்க முழுக்க, பட்டுத் துணியால் வடிவமைக்கப்பட்ட இந்த உடையை தயாரிப்பதற்கு, ஒரு மாதம் ஆனதாம்.

# கோடைகாலக் குறிப்புகள்

★ வர்த்தகைப்பழத்தை ப்ரீஸரில் வைத்தால், பழத்தில் இருக்கும் தண்ணீர் ப்ரீஸ் ஆகி ஐஸ்க்ரீம் சாப்பிடுவது போல் இருக்கும்.

★ மோரில் கருவேப்பிலையுடன் பொடிப்பொடியாக அரிந்த வெள்ளரித்துண்டு, மாங்காய், இஞ்சி ஆகியவற்றைப் போட்டுப் பருகலாம்.

★ வியர்வையைப் போக்கி ப்ரெஷ் ஆக இருக்க நான்கு சொட்டு எலுமிச்சம்பழச் சாறை குளிக்கும் தண்ணீரில் சேர்த்து குளித்துப் பாருங்கள்.

★ நுங்குகளை கையால் பிசைந்து சீனி, பால், ஏலக்காய் சேர்த்து ப்ரிட்ஜில் வைத்துச் சாப்பிட இயற்கையான ஐஸ்க்ரீம்.

★ குழந்தைகளுக்கு வியர்க்குரு வந்தால் கட்டிகள் மீது நுங்கை மசித்துத் தடவுங்கள்.

★ கோடையில் மண்பானை நீரைக் குடிக்கிறீர்களா? அதில் சிறிது துளசி இலைகளைப் போட்டுப் பருகுங்கள். உடலுக்கும் நல்லது. உடல் குளிர்ச்சியாகவும் இருக்கும்.



★ மோர், இளநீர், எலுமிச்சைச் சாறு, பழச்சாறுகள் என்று ஏதாவது ஒன்றை தினமும் அவசியம் பருகுங்கள்.

★ வெயில் காலத்தில் சூட்டினால் வயிற்று வலி வரும். இதற்கு கசகசாவை மிக்ஸியில் அரைத்து கொதிக்க வைத்து பாலோடு சேர்த்து கொஞ்சம் சீனி போட்டுச் சாப்பிட வயிற்று வலி பறந்து போகும். ஒரு டம்ளர் பாலுக்கு ஒரு தேக்கரண்டி சீனியும், இரண்டு தேக்கரண்டி கசகசாவும் போடலாம்.

★ வெயில் காலத்தில் மிக அதிகாலையில் அல்லது மாலையில் நன்றாக வெயில் தாழ்ந்த பிறகு செடிகளுக்கு நீரூற்ற வேண்டும். இதனால் நீண்ட நேரம் மண்ணில் ஈரப்பதம் இருக்கும்.

★ கல்வீட்டிலிருப்பவர்கள் முற்றத்தில் கிடுகுப் பந்தல் கட்டிவிடுங்கள். இரவில் ஓலையில் நீர் தெளித்துவிட்டால் ஏ.சி. யில் இருப்பது போல இருக்கும்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமும் பிகெலோ ஏரோஸ்பேஸ் என்னும் தனியார் நிறுவனமும் இணைந்து விண்வெளியில்

# "பீம்" என்ன இது?



செலுத்த இருக்கும் நவீன தங்கும் அறைக்குத்தான் "பீம்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

தங்கும் அறை என்று ஒரு எளிமைக்காக நாம் அழைக்கலாமே தவிர, உண்மையில் இதை விண்வெளி மொட்யூல் (space module) என்பார்கள். அதாவது பல்வேறு நாடுகள் இணைந்து ஏற்கனவே விண்வெளியில் மிதக்க விட்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இது எக்ஸ்ட்ரா 'பிட்டிங்'காக பொருத்தப்பட இருக்கிறது. அதாவது, நம் வீட்டுக்கு மேல் இன்னொரு மாடி கட்டி இடவசதி செய்துகொள்வது மாதிரி, விண்கலங்களுக்கான ஒரு ரெடிமேட் மாடிதான் இந்த மொட்யூல்.

இப்படிப்பட்ட ரெடிமேட் மொட்யூல்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கின்றன. இத்தாலி அனுப்பிய tranquility, அமெரிக்கா அனுப்பிய harmony போன்றவை அவற்றில் முக்கியமானவை. அவற்றில் எல்லாம் இல்லாத பல சிறப்பு அம்சங்கள் "பீம்" மொட்யூலில் உண்டு. உதாரணத்துக்கு ஹார்மனி 24 அடி நீளமும் 14 அடி அகலமும் கொண்டது. பீம் 13 அடி நீளமும் 10.5 அடி அகலமும் கொண்டது. அளவைப் பொறுத்தவரை இது கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி சிறியது. ஆனால் எடை அடிப்படையில் ஹார்மனியின் எடை 14,288 கிலோ என்றால், பீம் வெறும் 1,360 கிலோ தான். குறைந்த எடை கொண்ட மூலப் பொருட்களால் செய்யப்பட்டிருப்பதுதான் இதற்குக் காரணம்.

மேலும் இந்த பீம் விரிவாக்கம் செய்யக்கூடிய வகையைச் சேர்ந்தது. நாம் சோபாவை விரித்து கட்டிலாக்குவது போல, ஒரு மொட்யூலாக இருக்கும் இதை பல மொட்யூல்களாக விரித்துக் கொள்ள முடியும். காற்றுத் தலையணை போல காற்று ஊதுவதன் மூலம் ஒரு அறையாக விரிவடையும் பகுதியும் இதில் உண்டு. விண்வெளிக்குச் சென்றதும் இதற்குள்ளேயே அடைத்து வைக்கப்பட்டிருக்கும் காற்று சிலிண்டர்கள் திறந்து, பல அறைகள் கொண்ட பிரமாண்ட மொட்யூலாக உருமாறிவிடும். பொதுவாக விண்வெளி ஆராய்ச்சிக்குச் செல்லும் வீரர்கள் தங்கியிருப்பது சர்வதேச விண்வெளி நிலையத்தில்தான். இப்போது அதில் பீம் இணையப் போவதால், இன்னும் அதிகம் பேர் தங்கியிருந்து, ஆராய்ச்சிகள் செய்ய முடியும்.

மேலும் இதுபோன்ற குறைந்த எடை மொட்யூல்கள் அனுப்பப்பட்டு, விண்வெளி நிலையத்தில் இணைக்கப்பட்டுவிட்டால், விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளைக் கூட சுலபமாக அழைத்துச் சென்று தங்க வைக்கலாம் என்கிறார்கள் நாசா விஞ்ஞானிகள். இப்படிப்பட்ட மொட்யூலை இணைக்க செலவும் குறைவு என்பதால், அந்த விண்வெளி பயணத்துக்கான செலவும் விரைவில் நடுத்தர மக்களின் பட்ஜெட்டுக்குள் அடங்கிவிடுமாம்!

# கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு...

ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான் ஒரு மன்னன். இருந்தாலும் அவன் மனம் கவலைப்பட்டது. வாழ்க்கையில் நிம்மதி இல்லை என எண்ணியவன், ஒரு முனிவரிடம் சென்று, தனது பிரச்சினையைச் சொன்னான்.

"கவலை தீர வேண்டுமென்றால் கவலை இல்லாதவனுடைய சட்டையை வாங்கிப் போடு..." என்று அறிவுரை கூறினார் அந்த முனிவர்.

மன்னன் மாறுவேடத்தில் நாடெல்லாம் அலைந்தான். "கவலை இல்லாதவர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று தேடியவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஒருநாள், மாறுவேடத்தில் ஒரு குடிசை அருகே சென்றான். வீட்டுக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது - "அப்பாடா, எனக்குக் கவலையே இல்லை. இப்படியே கவலையில்லாமல் இனிமேலும் இருக்க வேண்டும்!" என அந்த ஏழை, தனது மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"அப்பாடா, நமது கவலையும் தீர்ந்தது!" என்று நினைத்த மன்னன் வேகமாக உள்ளே நுழைந்து, அந்த ஏழையிடம் - "நான்தான் உங்கள் மன்னன். கவலையில்லாத



மனிதன் அணியும் சட்டை எனக்கு வேண்டும். உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன். உன் சட்டையை எனக்குத் தா!" என்று கேட்டான்.


"முடியாது!" என்றான் ஏழை.


"எவ்வளவு பொன் வேண்டுமானாலும் தருகிறேன்..." என்றான் மன்னன்.

"மன்னா, என்னிடம் உடம்பில் போட ஒரு சட்டைகூட இல்லை. அதுதான் உண்மை!" என்றான் அந்த ஏழை.

தனது உடம்பை மறைக்கக்கூட சட்டை இல்லாதவன் கவலையில்லாமல் வாழ்கிறான் செல்வச் செழிப்பில் வாழும் மன்னன் நான், கவலையில் வாழ்வதா? என்று யோசித்த மன்னன் அரண்மனை திரும்பினான்.

அன்று முதல் நாட்டு மக்களுக்கு தன்னால் முடிந்த மட்டும் உதவிகளைச் செய்து கவலையின்றி வாழ்ந்தான்.






# கீழ்க்கரவை யார்க்கரு வரசித்திவிநாயகர் ஆலயம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசத்தின் கீழ்க்கரவை யார்க்கருவில் வயலும் வயல்சார்ந்த இடமும் வளைந்து கிடக்கும் மருதநிலத்தில் குறை தீர்த்து வினை போக்கும் வரசித்தி விநாயகப் பெருமான் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே இணைந்து மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை பிரதிட்டை செய்யப்பட்டு அடியார்கள் வழிபட்டு வந்திருக்கின்றனர்.

சில தோம்புகளின்படி ஒல்லாந்தர் ஆட்சி நிலை பெறுவதற்கு முன்பிருந்தே ஆலயம் அமைத்து மக்கள் வழிபாடு செய்து வந்துள்ளனர் என்றும் செங்குந்தர் பரம்பரையைச் சேர்ந்த மக்கள் ஆலயத்தை அமைத்து ஆலயத்திற்குரிய நிலத்தை, தாங்களும் நாவித மக்களும் அயலைச் சேர்ந்த மக்களும் வழங்கினார்கள் என்று தோம்புகளின்படி அறியக் கிடக்கின்றது.

யார்க்கரு விநாயகப் பெருமானை தோட்டத்துப்




பிள்ளையார் என்றும், செல்லக் கணபதி என்றும் மாணிக்கச் செல்லா என்றும் அழைக்கப்படுகின்ற காரணத்தால் வெளிநாட்டுப்படையெடுப்பின் முன்னரே பிரதிட்டை செய்து மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். என்பதும் மிகத் தொன்மைவாய்ந்தது என்பதும் படையெடுப்புகளின் பின் மக்கள் ஆலயத்துக்கு முன்பாகவே உள்ள வயல் நிலத்தில் தேடியெடுத்துப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தனர். என்பதும் புலனாகின்றது.

அன்றியும் கீழ்க்கரவை செங்குந்த மக்களின் காணித் தோப்புகளிற்காணப்படுகின்ற ஆதாரங்களைக் கொண்டு (உறுதிகளைக் கொண்டு) இவ்வாலயத்திற்கு செங்குந்தர்கள் மட்டும் காணிகளைத் தர்மசாதனம் செய்யவில்லை.நாவிதர் சமூகம் உட்பட அயலவர்களும் காணிகளைத் தர்மசாதனம் செய்துள்ளனர் என்பது ஆவணங்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது. அதனால் இன்று ஆலயத்தில் வழிபாடு செய்துவரும் அடியார்களைப் புறக்கணிக்க முடியாது. தனிப்பட்ட எவர் ஒருவருக்கும் ஆலய உரிமை கிடையாது. ஆலய நிர்வாக உரிமை இன்று வழிபடுவோர்களால் உருவாக்கப்படும் "ஆலய அறங்காவல் குழு"விற்கே உரியது.

ஆலய சொத்துக்களை அழித்து, ஆலயத்தைப் பூட்டி, எழுந்தருளிகள் உட்பட எல்லாவற்றையும் 1976 – 86ஆம் ஆண்டு காலப்பகுதியில் வண்டியில் ஏற்றி தனது வீடு கொண்டுசென்று வைத்திருந்த முகாமையாளர்களையும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். பொன்னம்பலம் சோமஸ்கந்தசிவம் (ஆசிரியர்) தலைமையில் உருவாக்கம்பெற்ற குழுவின் பெரும் முயற்சியின் பயனாகவே ஆலயத்தின் எழுந்தருளிகள் உட்பட ஒரு பகுதிப் பொருட்களை மீளப் பெற்று, 1987ஆம் ஆண்டிற்குப் பினனர் ஆலய பூஜை வழிபாடுகள் தடையின்றி நடைபெற்று வருகின்றது.

கொட்டிலில் இருந்த ஆலயத்தை கி.பி.18ஆம் நூற்றாண்டிற்குப் பின் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த மணியம் சின்னத்தம்பியும் இவருடைய சந்ததியினரும் இவர்களில் ஒருவரான தாமர் சின்னத்தம்பியும் ஒருவருக்குப் பின்னர் ஒருவராக மணியகாரராக இருந்து பெரும் முயற்சியினால் ஆலயத்தை புதுப்பொலிவு பெறச்செய்து, மக்கள் வழிபட்டு வந்தனர் என்று மூதாதையினரால் அறியக்கூடியதாகவுள்ளது. இவர்களுக்கு நாங்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாகவே இருக்கவேண்டும்.


1970 களுக்கு முன்னர் திரு. க.சிற்றம்பலவாணர் இவரது மருமகனான சின்னதம்பி கந்தையா இவர்களுடைய ஆலயப் பணிகள், அரும்பெரும்தொண்டுகளையும் நான் நேரில் கண்டிருக்கின்றேன். குறிப்பாக பூங்கொல்லை. ஆவுதரஞ்சிக்கல் போன்ற பெரும்பணிகளை அர்ப்பணிபபுடன் செய்தவர்கள் உயர்ந்த எண்ணங் கொண்டவர்கள் இதற்குப் பிற்பகுதியில் தெடுத்தனைக் கிராமத்தில் வசித்தவரான சித்தவைத்தியர் (காவடி வேலுப்பிள்ளை) சண்முகம் வேலுப்பிள்ளை ஆலயத்தின் தலைவராகத் தோற்றம் பெற்றார். இந்தக் காலப்பகுதியில் நீண்ட காலமாக கும்பாபிஷேகம் நடைபெறாமல் ஆலயத்தின் மூர்த்



திகரம் குறைந்து காணப்பட்டது. காவடி வேலுப்பிள்ளை என்பவரின் தளரா முயற்சியினால் திருப்பணி வேலைகளைச் செய்வித்து 1974 – 75 களில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. செங்குந்த மக்களால் எந்த உதவிகளும் கிடைக்கவில்லை என்றே அறுதியாகக் கூறமுடியும். அயலில் வாழும் தெடுத்தனை மக்கள் அள்ளி வழங்கிய பெருந்தொகைப் பணமும் பொருட்களாலும்தான் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று யார்க்கரு விநாயகப் பெருமானை பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடுகள் ஆரம்பித்துள்ளது. இதற்கு ஆதாரமாக தலைவர் சண்முகம் வேலுப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட கும்பாபிஷேக ஆலயப் பதிவு இன்றும் உள்ளது.

எனவே ஆலயம் ஒரு பொது நம்பிக்கைச் சொத்து. எவருக்கும் தனிப்பட்ட முறையில் உரிமை கிடையாது. மூடத்தனமாக எண்ணி பிழையான பாதையில் செல்பவர்களை யார்க்கருவான் தன்னுடைய முக்கண் பார்வையினாலே திருந்தச் செய்வார் என்பதில் மக்களுக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

ஆக்கம்
**ந.தங்கத்துரை**
(கிராம அலுவலர்)





# சீசன் ரிக்கெற் வழங்கப்படவில்லை
# முல்லை மாணவர்கள் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பேருந்துக்கான சீசன் ரிக்கெற் வழங்கப்படாமையால் மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 115 பாடசாலைகள் உள்ள நிலையில் இங்கு கல்வி பயிலும் மாணவர்களில் பேருந்தில் பயணத்தை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் ச்சன் ரிக்கெற் வழங்கப்படுவது வழமையானதாகும். எனினும், இங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு இதுவரை இச்சீசன் ரிக்கெற் வழங்கப்படாமையால் மாணவர்கள் நாளாந்தம் பணம் கொடுத்தே பாடசாலைக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாக மாணவர்களின் பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கு சீசன் ரிக்கெற் வழங்கும் நடைமுறை ஏனைய மாவட்டங்களில் உள்ள போதிலும் இம்மாவட்டத்தில் இல்லை எனத தெரிவிக்கும் பெற்றோர் இதனை நடைமுறைப்படுத்தி மாணவர்களுக்கு சீசன் ரிக்கெற் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றனர்.

கஷ்டத்தின் மத்தியில் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு நாளாந்தம் பணம் கொடுத்து பேருந்தில் செல்ல முடியாத நிலையில் உரிய அதிகாரிகள் இவர்களுக்கு சீசன் ரிக்கெற் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# வாய்க்காலுக்கு குறுக்காக வீடமைப்பு நடவடிக்கை
## 7 குடும்பங்கள் பாதிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நட்டாங்கண்டல் சின்னக்குளம் கழிவு வாய்க்கால் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் புதிய வீட்டுத்திட்டப்பணியால் இப்பகுதியில் வாழும் 7 குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசசெயலர் பிரிவில் அண்மையில் இந்திய வீட்டுத்திட்டம் 60 குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டு. வீடு கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இவ்வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்படும் ஒரு வீடு வாய்க்காலுக்கு குறுக்காக அமைக்கப்பட்டு வருவதாகவும் இதனால் கழிவு நீர் ஸ்தம்பித மடைந்து குடியிருப்புக்களினூடாக பாய்வதனால் இங்குள்ள 7 குடும்பங்கள் தாம் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறி மூன்றரை வருடங்கள் கழிந்துள்ள நிலையில் வாழ்வாதார ரீதியாக ஓரளவு வாழ்ந்து வரும் எமக்கு இவ்வாறான கஷ்டங்களையும் மேலும் அனுபவிக்க முடியாது என இக் குடும்பங்கள் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர். (140)

# சுகாதாரமற்ற மலசலகூடம்
# பணம் அறவிடுவதாக விசனம்

வவுனியா மத்திய பேருந்து நிலைய மலசல கூடங்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றபோதிலும் அவசர தேவை நிமிர்த்தம் பயன்படுத்துவோரிடம் பணம் அறவிடப்படுவது நியாயமற்ற செயற்பாடு என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் மத்திய பேருந்து நிலையத்தில் தூரஇடங்களுக்கான பயணத்தை மேற்கொள்வோர் வருகின்ற நிலையில் சுகாதாரமற்ற முறையில் காணப்படும் இதனையே பயன்படுத்திவருவதாகவும் இதற்கு 10 ரூபா கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கும் பயணிகள் இச்செயற்பாடு நியாயமற்ற விடயம் என தெரிவிக்கின்றனர். எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் இவற்றை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் கேட்டுக்கொள்கின்றனர்.

# பருத்தித்துறை கோட்டமட்ட எழுத்தாக்க போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பருத்தித்துறை கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டியில் எழுத்தாக்கப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு:

ஆக்க எழுத்துப் பிரிவு 1

மோ. ரமணன்(மேலைப்புலோலி சைவ வித்தி), பா.சாகித்தியா(வடஇந்து ஆரம்பபாடசாலை), வீ.துவாரகா ( கெருடாவில் அ.த.க. பாடசாலை)

கட்டுரை வரைதல் பிரிவு 2

செ. ஆர்த்திகா (வல்லைமகளிர் கல்லூரி), பி.கிருஷாந்தினி (சிதம்பராக்கல்லூரி), இ.நிதர்சனா (கொற்றாவத்தை அ.த.க பாடசாலை)

பிரிவு 3

எஸ். நிருஷாந்த் (ஹாட்லிக்கல்லூரி), சி.லக்சிகா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), வே. ரிசானா (சென் தோமஸ் றோ.க.த.க. பாடசாலை)

கட்டுரை வரைதல் இலக்கிய நயத்தல் பிரிவு 4

வி.சுகிர்தன் (ஹாட்லிக் கல்லூரி), வ.துஷாயினி (தும்பளை சிவப்பிரகாச வித்தி), உ.சகானா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

தமிழியற் கட்டுரை இலக்கிய நயத்தல் பிரிவு 5


வி.பிரவீன் (வேலாயுதம் மகாவித்தி), பா. பகீரதன் (ஹாட்லிக் கல்லூரி), சு.அர்ச்சனா (தொண்டைமானாறு வீரகத்தி மகாவித்தி)

இலக்கணப்போட்டி பிரிவு 4

பா.நர்மதா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), செ.சோனிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கு. கீர்த்தனா (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்)

பிரிவு 5

க.கோபிகா (வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி), யோ.ஜெயசுதா (மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை), ஈ.சாந்தரூபன் (வேலாயுதம் மகா வித்தி) (109)




துருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் ஒஸ்லோ பேர்கன் நோர்வே அனுசரணையுடன் முன்னெடுத்துள்ள தரம் மூன்று மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் வைபவத்தில் பிரமுகர் ஒருவர் மாணவனுக்கு புத்தகப் பை வழங்குவதையும் இலங்கை வங்கியில் மாணவர்களுக்கு கணக்கு ஆரம்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்வதையும் காணலாம்.(68)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு உண்மைக் காதலியால் துரோகம் பண்ண இயலுமா? "சுப்பிரமணியபுரம்" திரைப்படம் இதற்கு ஒரு பதில் தருகிறது. பெரும்பாலான பெண்கள் குடும்பம் தரும் ஸ்திரத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். இப்படத்தின் நாயகி நாயகனை உண்மையாகத் தான் காதலிக்கிறாள். ஆனால் குடும்பத்தின் பாதுகாப்பா காதலனின் உயிரா எனும் தேர்வு வரும் போது அவள் சட்டென்று குடும்பத்தை தான் தேர்ந்தெடுக்கிறாள். பெணகளுக்கு உயிரியல்ரீதியாகவே பாதுகாப்பு மிக முக்கியம். அத்தருணத்தில் அவளால் அப்படித் தான் செயல்பட முடியும். ஒரு வேளை தன் காதலனை மணந்து குடும்பமாகி ஸ்திரப்பட்ட பின் இப்படியான சிக்கல் தோன்றியிருந்தால் வேறு முடிவெடுத திருப்பாள். தன் கண்முன்னாடி காதலன் கூட்டமாக வெட்டிக கொல்லப்படுவதை பார்த்து அவள் அரற்றி அழும் காட்சி நம்மை மிகவும் தொந்தரவு செய்யக் கூடியது. வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் நியாயத்தை மறந்து நடைமுறைத் தேவைக்காக ஒரு முடிவெடுக்க நேர்கிறது. அது தான் துரோகம் என்கிறது "சுப்பிரமணியபுரம்". துரோகிகள் மற்றபடி கெட்டவர்கள் அல்ல. நம்மைப்போல் நல்லவராய் இருப்பதற்காக வசதியான சூழல் அவர்களுக்கு இருப்பதில்லை, அவ்வளவு தான்.

– அபிலாஷ் சந்திரன்

ஒரு நல்ல திரைப்படம், எந்தவொரு தீமைக்கு எதிராகக் குரல் கொடுத்தாலும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களை ஒட்டுமொத்தமாகக் கெட்டவர்கள் என்று காட்டவே காடாது, இது ஒரு முக்கியமான அளவுகோல் என்று நான் நினைகிறேன். ஒருதலைப்பட்சமான அரசியலும், காழ்ப்புப் பிரசாரமும், இனத்துவேசமும் எக்காலத்திலும் ஒரு நல்ல திரைப்படமாக ஆகவே முடியாது. படைப்பாளி ஒரு தீமையைச் சாட விரும்புகிறார் என்றால், அந்தத் தீமை எத்தனை கொடியதாயினும் சரி, அதை விமர்சிக்கும்போது படைப்பாளி நடுநிலையையும் நிதானத்தையும் கைவிட்டுவிடவே கூடாது.

உதாரணத்திற்கு, ஒரு இயக்குனர் இலங்கைப் பிரச்சினையைப் பற்றிப் படமெடுக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் இலங்கை இராணுவத்தையும் ராஜபக்ஷவையும் கொடூரமான கொலைகாரர்களாகக் காட்டவிரும்புகிறார் என்றால், அந்த இயக்குனர் சமன்செய்வதற்காக, சிங்களர்கள் எல்லோரும் தீயவர்கள் அல்ல, நல்லவர்களும் இருக்கிறார்கள என்று படத்தில் எங்காவது பதிவுசெய்ய வேண்டும். அப்படி, சமநிலைப்படுத்துவதற்காகவே வைக்கப்படும் காட்சி வலிந்து திணிக்கப்பட்டதாகத் துருத்திக்கொண்டு தெரியாமல் அமைபபது இயக்குனர் மற்றும் கதாசிரியரின் சாமர்த்தியம். இந்தக கயிற்றில் நடக்கும் வித்தையை நிகழ்த்தத் துணிந்த கலைஞன் ஒழுங்காக Balance செய்துதான் ஆகவேண்டும், வேறு வழியே இல்லை.

– சார்லஸ்

பரதேசி படத்தில் அடிப்படைத் தவறு, சாலூரில் வாழ்ந்த அந்த மக்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது மறைககப்பட்டிருப்பது. அவர்கள் கடைநிலை மக்களாக இல்லை என்று வரலாற்றைத் திரிக்கப்படும்போது இந்துத்துவாவின் ஒரு மிகப் பெரிய வரலாற்றரசியல் அங்கு கட்டமைய ஆரம்பிக்கிறது. பியானிஸ்ட் என்னும் படம் பற்றியும் அதன் உலகத்தரம் பற்றியும் அதில் உள்ள வதைமுகாம்களின் கொடுமைகள் பற்றியும், கலைத் தன்மை பற்றியும் பலரும் எழுதியுள்ளனர். அதில் உள்ள இன அடையாளத்தை அழித்துவிட்டால் அந்தப்படம் மிகச் சாதாரணமான படமாக மாறிப்போய்விடும். பியானிஸ்ட் யூதனாக இல்லாமல், நாஜிகளின் அதிகார அழித்தொழிப்பு சுட்டிக் காட்டப்படாமல் எந்தவித இனஅடையாளமும் இல்லாமலிருந திருந்தால் அந்த உலகத்தரம் அடைந்திருக்குமா? முதலில் உலகத்தரம் என்பது என்ன? கலை என்பது என்ன?

வெறும் இருட்டு போன்ற மங்கிய வெளிச்சத்தில் காட்சிகளைப் படம் பிடிப்பதோ, வறுமையைக் கூவிக்கூவி விற்பதோ அல்ல கலை. சத்யஜித்ரேயின் 'பதேர் பாஞ்சாலி' என்ற படத்திற்குப் பின்னால் உள்ளது வெறுமனே வறுமை மட்டுமே அல்ல. அன்றைய கிராமங்களின் இறுக்கமான சாதி மற்றும் நில உடைமைப் போக்கும் அது பிஞ்சுமனதில் ஏற்படுத்தும் ஆறாத வடுக்களும் கொண்ட எளிய உண்மை. மனதை பிழியப்பிழிய துன்பகரமான வேதனைகளை மாத்திரமே காட்சிஜோடனைகளாக முன்வைப்பதனால் மட்டுமே காட்சிகள் கலைத்துவம் பெற்றுவிடாது. கலைத்தன்மையின் சாயல் படிந்திருக்கலாம், அவ்வளவுதான்.

– கௌதமசித்தார்த்தன்

# வட, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி

# அரசால் 214 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு



(கொழும்பு)

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் மூலம், வட, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் 214 பில்லியன் ரூபாவிற்கும் அதிக மான தொகையை ஒதுக்கியுள் ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

மத்திய வங்கியின் 2012ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக் கையை மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப் ரால் நேற்றுமுன்தினம் ஜனாதிப தியிடம் கையளிக்கும் நிகழ்வி லேயே ஜனாதிபதி மேற்கண்ட வாறு தெரிவித்தார். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் துரித அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்றுக் கொண்டு வருகின்றன, அனைத்து துறையிலும் பாரிய அபிவிருத் தித் திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகின்ற அதே வேளை தேசிய மாகாண கிரா மிய மட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் வீதி அபிவிருத்திப் பணிகள் விருத்தி செய்யப்பட்டன. இதன டிப்படையில் நுரைச் சோலை அனல் மின் நிலையம், ருஹுனு மாகம்பர துறைமுகம், கொழும்பு கட்டுநாயக்க பாதை, தெற்கு துரித பாதை, கொழும்பு துறை முக விரிவாக்கல் போன் றவை அபிவிருத்தி செய்யப்பட் டுள்ளது.

விவசாயம்,மீன்பிடி,சிறிய மற் றும் நடுத்தர கைத்தொழில்கள் போன்ற துறையில் அபிவிருத் திப் பணிகளை துரிதப்படுத்தப் பட்டுள்ளதுடன் வீடு, குடிநீர், மின்சாரம், பாடசாலை, சுகாதா ரம், கல்வி போன்ற துறைகளில் மாகாண மட்டத்தில் அபிவிருத் திப்பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் ஜனா திபதி சுட்டிக்காட்டினார்

மூன்று தசாப்தங்களாக புரை யோடிப் போயிருந்த பயங்கர வாதத்தை இல்லாதொழித்த அதேவேளை நாட்டின் பொரு ளாதாரத்தையும் சிறந்த முறை யில் பேணக்கூடியதாகவிருந்தது.

கிராமத்துக்கும் நகரத்துக்கும் வேறுபாடு இல்லாதவகையில் கிராமங்களின் வசதிகள் மேம்ப டுத்தப்படும் எனவும் மேலும் தெரிவித்தார் இந்நிகழ்வில் அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பி னர்கள் புத்திஜீவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டங்களில் வருகிறது திருத்தம்

(கொழும்பு)

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் உள்ளிட்ட தனியார் பிரிவுக ளின் பெற்றோல் உற்பத்திகளை இறக்குமதி செய்து விநியோகிக் கும் நிறுவனங்களை ஒழுங்கமைத்தல் தொடர்பில் புதிய சட்டங் களை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கென பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் இரண்டு சட்டங் களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க குறிப்பிட்டார். தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமைய, தனியார் பிரிவுகளிடம் உள்ள பெற்றோல் உற்பத்திகளை விநியோகிக்கும் நிறுவனங்களை ஒழுங்கமைக்க முடியாத நிலை காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோல், டீசல், மசகு எண்ணெய் மற்றும் கப்பல்களுக்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் என்பன தனியார் பிரிவுகளின் ஊடாக இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்றன.

புதிய திருத் தங்கள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் குறித்த நிறுவனங்கள் விநியோகிக்கும் உற்பத்திகளின் தன்மை மற்றும் விலை தொடர்பில் விதிமுறைகளைக் கொண்டுவர முடியுமென அவர் கூறினார்.

# நிறுவை இயந்திரங்கள் தொடர்பில் வவுனியாவில் விசேட பரிசோதனை

(வவுனியா)

வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை நிறுவை இயந்திரங்கள் தொடர் பில் விசேட பரிசோதனைகள் இடம்பெற்றன.

அளவீட்டு அலகுகள் நிய மங்கள் சேவைத்திணைக்களத் தின் வவுனியா அலுவலக பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தலைமையி லான குழுவினர் இப் பரிசோத னையில் ஈடுபட்டனர்.

கடந்த சில மாதங்களாக நிறுவை இயந்திரங்களுக்கு முத்திரையிடும் செயற்பாடு வவு னியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வந்திருந்த நிலை யில் முத்திரையிடாத நிறுவை இயந்திரங்களை கண்டறிவ தற்கே இப்பரிசோதனை இடம் பெற்றது என பா.இராஜேஸ் வரன் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த பெப் ரவரி மாதம் வவுனியா மாவட் டத்தில் நடத்தப்பட்ட திடீர்ப் பரி சோதனையின் போது 17 வர்த் தக நிலையங்களில் முத்திரை யிடப்படாத நிறுவை இயந் திரங்கள் இனம் காணப்பட்டு அவ் வர்த்தக உரிமையாளர்க ளுக்கு எதிராக வவுனியா நீதி வான் நீதிமன்றில் தாக்கல் செய் யப்பட்ட வழக்கில் 42000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட் டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்தார்.



தற்போது அடையாளம் காணப்படும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வும் எதிர்வரும் நாட்களில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ள தாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

# ஜப்பானிய அரசாங்க புலமைப்பரிசில்

(கொழும்பு)

இலங்கை மாணவர்களுக்கு ஜப்பானிய அரசாங்கம் "மெக்ஸ்ட்" திட்டத்தின் கீழ் 2014ஆம் ஆண்டுக்கு புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது. இவை பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி, பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய பிரி வுகளின் கீழ் வழங்கப்படவுள்ளது.

இந்த விண்ணப்பங்கள் மே 3ஆம் திகதிக்கு முன் உயர் கல்வி அமைச்சிற்கு அனுப்ப வேண்டும். உயர் கல்வி அமைச்சும் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகமும் இணைந்து நடத்தும் பரீட்சையின் அடிப்படையிலேயே தெரிவுகள் நடைபெறும். மேலதிக விபரங்களை http://www.mohe.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக அறிய முடியும்.

# அதிகரித்துச் செல்கிறது சிறுவர் மீதான துஷ்பிரயோகம்

(கொழும்பு)

சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், மற்றும் பாலி யல் வல்லுறவுகள் கடந்த வரு டத்தில் இலங்கையில் அதிகரித் துக்காணப்படுவதாக நீர்வழங் கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித் துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

கடந்த வருடத்தில் 3859 பாலியல் ரீதியான துன்புறுத்தல் கள், மற்றும் பாலியல் வல்லு றவுச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யப்பட் டுள்ளது.

இவற்றில் சிறுவர்களுக்கெ திரான சம்பவங்கள் தொடர் பாக 1759, பெண்களுக்கெதி ராக 330 சம்பவங்கள் பதிவாகி யுள்ளன. இதில் 1194 சம்பவங் கள் சிறுவர் துஷ்பிரயோகங்க ளாகும். அத்துடன் 547 சிறு வர்கள் மற்றும் 29 பெண்கள் மீது பாலியல் துன்புறுத்தல் சம் பவங்களும் பதிவாகியுள்ளன எனத்தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் தெரிவித்த புள்ளிவிபரங்களை விடவும், பாலியல் ரீதியான துன்புறுத்தல் சம்பவங்கள் அதிகமெனவும், இதில் பாதிக் கப்பட்ட பலர் அச்சம் காரண மாக முறைப்பாட்டைத் தெரி விக்காமல் உள்ளதாகவும் தக வல்கள் தெரிவிக்கின்றன.

# போதைப்பொருளுடன் சிக்கிய சிறைச்சாலை காதல் ஜோடி

(கொழும்பு)

சிறைச்சாலைக்குள் காதலர் களாகி சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்றதன் பின்னர் கணவன் மனைவியாக வாழ்ந்த ஒரு ஜோடியினர் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் நேற்று முன்தினம் கைது செய் யப்பட்டனர்.

800 கிராம் ஹெரோயின் பக் கற்றுக்களுடனேயே இவ்விரு வரும் மாதிவலவில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவ்விருவரும் வழங்கிய தகவல்களின் பிரகாரம் மஹரக மவில் வைத்து மற்றுமொருவர் 400 கிராம் ஹெரோயின் பக் கற்றுக்களுடன் கைது செய்யப் பட்டார். மிரிஹான விசேட குற்ற விசாரணைப் பிரிவின்ரே இவர்களைக் கைது செய்துள் ளனர்.

மஹரகமவில் வைத்து கைது செய்யப்பட்ட நபரும் சிறைச்சாலையிலிருந்து விடு தலை பெற்றவர் என்று தெரி விக்கப்படுகின்றது. அத்துடன் சிறையிலிருந்து விடுதலையான மற் றுமொரு பெண்ணான "சுது அக்கா" இந்த போதைப்பொ ருள் விற்பனையின் பிரதான நபர் 'என்று தெரிவித்த பொலி ஸார் அவரைத் தேடி வலை விரித்துள்ளதாகவும் தெரிவித்த னர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் பெறுமதி ஆறு இலட்சம் ரூபா என்று தெரி வித்த பொலிஸார் மாதிவல வில் வைத்து கைதான பெண் இரண்டு மாத கர்ப்பிணி என்றும் தெரிவித்தனர்.

# புற்றுநோய் வைத்தியசாலையில் மாத்திரைகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

மகரகமவிலுள்ள தேசிய புற் றுநோய் வைத்தியசாலையில் மாத்திரைகள் மற்றும் இதர அடிப்படைவசதிகள் பற்றாக் குறையாகவுள்ளதென தன்னால் தெரிவிக்கப்பட்ட தகவல் பிழை யென நிரூபிக்கப்பட்டால் தனது நாடாளுமன்ற பதவியை இராஜி னாமாச் செய்யத்தயாராக உள் ளதாக ஐ.தே.கவின் நாடாளு மன்ற உறுப்பினர் தயாசிறி ஜய சேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நாடாளுமன்றில் மேலும் தெரி விக்கையில்,

தேசிய புற்றுநோய் வைத் தியசாலையில் 17 வகையான மாத்திரைகளுக்கு தட்டுப்பாடுள் ளது. இது தொடர்பாக வைத் தியசாலைப்பணிப்பாளரை அழைத்து நான் தெரிவித்த உண்மைத்தன்மையை அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நான் தெரிவித்த தகவல் பிழை யென நிருபிக்கப்படுமானால் எனது எம்.பி.பதவியை நான் இராஜிநாமா செய்கின்றேன் எனத்தெரிவித்தார்.

எனினும் இவரது இந்தக்குற் றச் சாட்டை மறுத்த பிரதி சுகா தார அமைச்சர் லலித் திஸநா யக்க, அங்கு மாத்திரை தட்டுப் பாடு எதுவுமில்லை என்பதுடன் நோயாளிகள் எவரும் மருந் துவ பரிசோதனைகளுக்காக நீண்டநாட்கள் காத்திருக்கவில் லையெனவும் தெரிவித்தார்.

# கடந்த 7மாதங்களில் 200 பாடசாலைகள் மூடல்



(கொழும்பு)

இலங்கையில் கடந்த 7 மாதங்களில் 200இற்கும் மேற் பட்ட பாடசாலைகள் மூடப் பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

மேலும் 1590 பாடசாலைகள் மூடப்படும் அபாயம் உள்ளதாக வும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த கல்வி அமைசசர் பந்துல குணவர்தன, எந்த வொரு பாடசாலையையும் மூடு வதற்கு இடமளிக்கப்போவ தில்லை எனத் தெரிவித்துள் ளார்.

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

25) நீர்வீழ்ச்சி ஒன்றில் காணமுடியாதது?
 1. நீர் மேலிருந்து கீழ்நோக்கி விழுதல்  2. படகுகள் செல்லும் காட்சி
 3. கற்களின் மேல் நீர் விழுதல்  4. கண்ணைக் கவரும் காட்சி

26) புதிதாகப் பிறந்த குழந்தையிடம் இல்லாதது.
 1. சிவப்பு நிறமான தோல்  2. தலை நிறைய முடி
 3. சிறு பற்கள்  4. நன்றாகப் பார்க்கக் கூடிய கண்கள்

27) மலர்களில் இல்லாதது?
 1. விதம் விதமான வடிவங்கள்  2. பல்வேறுபட்ட இதழ்கள்
 3. நீண்ட தண்டு  4. பல்வேறுபட்ட நிறங்கள்


**கீழே முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தானது பிழையாக அமைந்திருப்பதற்குரிய காரணத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து கோடிக.**

28) வெளிச்சமற்ற காட்டு வழியாகத் தடுமாறியபடி பயணம் செய்துகொண்டிருந்த தாத்தா தனது சட்டைப் பையிலிருந்த மூக்குக் கண்ணாடியைப் போட்டவுடன் ஒழுங்காக நடந்து சென்றார்.
 1. மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாலும் இருட்டில் பயணம் செய்ய முடியாது
 2. இருட்டில் சட்டைப் பையிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுக்க முடியாது
 3. கண்ணாடி இருந்திருந்தால் பயண ஆரம்பத்திலேயே அவர் எதை அணிந்திருப்பார்

**முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் அதே கருத்தைத் தரக்கூடிய வாக்கியத்தை அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.**

29) திருடுவதில் ஆர்வமுடைய பிரணவன் குடிப் பழக்கமுடைய சிங்காரத்துடன் நட்புவை ஏற்படுத்திக் கொண்டான்.
 1. ஜாடிக்கேற்ற மூடியைப் போல
 2. வேப்பிலை மரத்தில் பாகற்கொடி படர்ந்ததைப் போல
 3. கெடுவான் கேடு நினைப்பான் என்பதைப் போல

**தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30)



A, B, C, D, E, F ஆகிய ஆறு நகரங்களை இணைக்கும் பாதைகள் கீழே உருவப்படத்தின் மூலம் தரப்பட்டுள்ளன. அவற்றில் D எனும் நகரத்திலிருந்து E நகரத்தினூடாக F எனும் நகரம் வரைக்குமான தூரம் யாது?
 1. 8 km  2. 17 km  3. 14 km

### கடந்த திங்கட்கிழமை வெளியான பயிற்சி வினாத்தாளின் விடைகள்.

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 2 | 21) 2 | 31) 3 |
| 2) 4 | 12) 3 | 22) 1 | 32) 3 |
| 3) 4 | 13) 3 | 23) 3 | 33) 3 |
| 4) 1 | 14) 1 | 24) 1 | 34) 3 |
| 5) 1 | 15) 2 | 25) 2 | 35) 3 |
| 6) 3 | 16) 3 | 26) 2 | 36) 1 |
| 7) 3 | 17) 2 | 27) 3 | 37) 2 |
| 8) 1 | 18) 1 | 28) 3 | 38) 1 |
| 9) 3 | 19) 2 | 29) 2 | 39) 2 |
| 10) 3 | 20) 1 | 30) 2 | 40) 1 |





## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013


பகுதி - II
1 மணி 15 நிமி


# கல்வி முரசு



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**கீழே முதலில் தரப்பட்டுள்ள உருவப் படத்துடன் தொடர்புடைய உருவப் படத்தை அதற்கெதிரே தரப்பட்டுள்ள உருவப் படங்களிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

01)

① ② ③

02)

① ② ③

**பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

03) அதிகாலையில் சேவல் கூவுவது?
 1. தூங்குபவர்களை எழுப்புவதற்காக
 2. இருள் மறைந்து ஒளி வரப்போவதை உணர்த்துவதற்காக
 3. தனது இறக்கைகளை அடிக்க வேண்டும் என்பதற்காக

04) “கடி நாய் கவனம்” என்பது ஒரு.
 1. கட்டளை  2. வேண்டுகோள்  3. ஆபத்தைக் குறிக்கும் வாக்கியம்

05) எனது வயது 36. எனது அம்மாவின் வயது எனது வயதின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவாகுமெனின் நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
 1. 30  2. 34  3. 36

06) அஜித் என்பவன் சஜித் என்பவனையும் விட இரு டொபிகள் அதிகமாகவும், ரஜித் என்பவனையும் விட நான்கு டொபிகள் அதிகமாகவும் வைத்துள்ளான். அஜித்திடம் 10 டொபிகள் இருப்பின் மூவரிடமும் உள்ள டொபிகள்.
 1. 12  2. 24  3. 36

07) தேங்காயின் விலை அதிகரிக்கின்றமைக்கான காரணம்?
 1. தென்னை மரங்களுக்கு உரம் போடாமை
 2. தென்னங் காணிகள் பெருமளவில் விற்கப்படுதல்
 3. தென்னை உற்பத்தி குறைவது

08) ரமணியின் வயது ரூபினியின் வயதின் அரைவாசியாகும். ரூபினியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினது வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனில் தர்சினிக்கு எத்தனை வயது?
 1. 15  2. 18  3. 20

09) ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும் போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறு பக்கத்திலிருந்து கணக்கிடும்போது அவள் ஆறாவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்.
1. 18 2. 19 3. 21


10) வரட்சியான காலங்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பதற்கான காரணம்
1. அக்காலங்களில் மரக்கறிகளின் உற்பத்தி மிகக் குறைவு என்பதால்
2. விவசாயிகள் அக்காலங்களில் மரக்கறி உற்பத்தியை விரும்பாததால்
3. அக்காலங்களில் போக்குவரத்து வசதிகள் போதியளவு இல்லாமையால்


11) மண்ணரிப்பு உள்ள இடங்களில் தாவரங்கள் நன்கு வளராமைக்கான காரணம்
1. அவ்வகையான இடங்களில் நீர் அதிகம் தேங்கி நிற்பதால்
2. தாவரங்கள் வளர்வதற்குப் பொருத்தமான மண் அத்தகைய இடங்களில் இல்லாமையால்
3. தாவரங்கள் வளர்வதற்குத் தேவையான மண்ணானது ஓடும் நீருடன் அடித்துச் செல்லப்படுவதால்

12) எங்கள் ஊரிலுள்ள அனேகமான வீடுகள் ஓடுகளினால் வேயப்பட்டிருந்தன எனின், இதிலிருந்து கூறக்கூடியது.
1. எங்கள் ஊரிலுள்ளவர்களில் அனேகமானவர்கள் செல்வந்தர்கள்
2. ஓடுகளினால் வேய்வது மற்றையவைகளையும் விட இலாபமானது
3. ஓடு போடப்படாத வீடுகளும் எங்கள் ஊரில் உள்ளன.

13) டானியல் என்பவர் கார் விபத்து ஒன்றில் இறந்துவிட்டார் எனின், இதிலிருந்து கூறமுடியாதது
1. கார்ச் சாரதி மது போதையில் வண்டியை ஓட்டியிருப்பார்
2. கார் வேகமாக வந்து டானியலை மோதியிருக்கலாம்
3. டானியல் பாதை ஓரமாக அவதானத்துடன் நடந்து சென்றிருப்பார்

14) வயற் காட்டிலிருந்த மாடுகள் எல்லாம் தங்களது வால்களால் ஈக்களைத் தாக்கின எனின், இதிலிருந்து கூறக்கூடியது?
1. வயற்காட்டிலிருந்த எல்லா மாடுகளுக்கும் ஈக்களைத் தாக்கக் கூடியளவிற்கு நீண்ட வால் இருந்திருக்கும்
2. ஈக்களைத் தாக்குவது மாடுகளின் பொழுதுபோக்கு
3. ஈக்கள் மாடுகளுக்குக் கொடுத்த தொந்தரவாலேயே அவ்வாறு தாக்கியிருக்கலாம்

15)

① ② ③


16)

① ② ③


**17ஆம், 18ஆம் வினாக்களில் முதலில் அமைந்துள்ள வாக்கியத்தின் அதே கருத்தைக் கொடுக்கக் கூடிய விடையை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

17) மலையைப் பார்த்து நாய் எவ்வளவுதான் குரைத்தாலும் மலை ஒருபோதும் சரியாது.
1. மலை நாயைவிடச் சக்தி வாய்ந்தது
2. மலை ஒருபோதும் சரியாது
3. கெட்டவர்களுடைய தீய வார்த்தைகளால் நல்லவர்களை ஏமாற்ற முடியாது

18) ஆற்றில் நீரைக் குடித்துவிட்டுக் கடலுக்கு நன்றி சொல்லுதல்.
1. ஆற்று நீரானது கடலிலிருந்தே பெறப்படுகின்றது
2. ஒருவரிடமிருந்து உதவியைப் பெற்றுவிட்டு வேறொருவருக்கு நன்றி கூறுதல்
3. கடல் நீரை ஒருபோதும் குடிக்க முடியாது

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

19) சதுரமுகி வடிவிலமைந்துள்ள இப்பெட்டியை விரிக்கும்போது தோன்றக்கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?

(1) (2) (3)

20) எல்லாப் பக்கங்களும் சமனாக அமைந்திருந்த காட்போட் பெட்டி ஒன்றை விரித்த போது அது அருகேயுள்ளவாறு இருந்தது எனின், அப்பெட்டியின் உயரம் என்ன?

1. 12 cm 2. 24 cm 3. 6 cm

**மாணவர்கள் சிலர் 5 பாடங்களில் பெற்ற புள்ளிகள் குறியீடுகளால் தரப்பட்டிருப்பதுடன், அவற்றின் மொத்தப் புள்ளிகளும் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி அதன் கீழ்க் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| பெயர் | 1வது பாடம் | 2வது பாடம் | 3வது பாடம் | 4வது பாடம் | 5வது பாடம் | பெற்ற மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| சமன் | □ | □ | □ | △ | △ | 400 |
| தாரகா | △ | △ | △ | △ | △ | ---- |
| நளாயினி | □ | △ | ○ | ○ | ○ | 375 |
| விமல் | □ | □ | ○ | ○ | △ | ---- |
| ரமணி | □ | □ | □ | □ | □ | 500 |

21) தாரகா பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
1. 250 2. 200 3. 300

22) ரமணி பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும், விமல் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?
1. 300 2. 200 3. 100

23) 5 மாணவர்களும் சேர்ந்து அதிகூடிய புள்ளியைப் பெற்றது எப்பாடத்தில்?
1. 2 ஆம் பாடம் 2. 1 ஆம் பாடம் 3. 3 ஆம் பாடம்

24) ஐந்து பேரும் சேர்ந்து, ஐந்து பாடங்களிலும் பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
1. 1850 2. 1900 3. 1925

# இலங்கை பிரச்சினை எதிரொலித்தால் வைகோ முதல்வர் ஆகியிருப்பார்

## தமிழக காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

(திண்டுக்கல்)

இலங்கை பிரச்சினை தமிழக தேர்தல்களில் எதிரொலித்திருக்கும் என்றால், வைகோ முதல்வராகியிருப்பார், என, காங்கிரஸ் கட்சியில் தமிழகத் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

இலங்கை மீனவர்களையும், தமிழக மீனவர்களையும் சந்திக்க வைத்து பேசிவிட்டால்



மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும். 2009 இறுதிக்கட்ட போரில் மனித உரிமைகள் மீறல் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற கருத்தில் காங்கிரஸுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. லோக்சபா தேர்தலில் கூட்டணி என்பது, அறைக்குள் முடிவு செய்வது இதுகுறித்து வெளியே பேச முடியாது. இலங்கை பிரச்சினை தமிழக தேர்தல்களில் பிரதானமாக எதிரொலித்திருக்கும் என்றால், வைகோ முதல்வராகியிருப்பார். தேர்தலுக்கும் இலங்கை பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை. தமிழக அரசு, மத்திய அரசிற்கு ஒத்துழைப்பு தருவதில்லை. இருவரும் சேர்ந்து பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகுக்க வேண்டும். கச்சதீவை மீட்ப தில் காங்கிரஸுக்கு ஆட்சேப மில்லை. இதில், சிக்கல் இருந்தால் நீண்டகால குத்தகைக்கு எடுக்கலாம். எந்தநேரத்தில் லோக்சபா தேர்தல் வந்தாலும் காங்கிரஸ் அதை சந்திக்கத் தயாராக உள்ளது, என்றார்.

இந்தியச் செய்திகள்

# நடிகை அஞ்சலியை காணவில்லையாம்



ஹைதராபாத்தில் ஹோட்டலில் தங்கியிருந்த நடிகை அஞ்சலியைக் காணவில்லை என்று அவரது அண்ணன் ரவிசங்கர் ஹைதராபாத் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

மார்ச் மாத இறுதியில் இருந்து ஹைதராபாத்தில் உள்ள ஹோட்டலில் தங்கியிருக்கும் அஞ்சலி, நேற்றுமுன்தினம் காலை முதல் காணாமல் போய் விட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய நடிகை அஞ்சலி, தனது சித்தி பாரதி தேவியும், சினிமா இயக்குநர் களஞ்சியமும் தன்னை துன்புறுத்துவதாகக் கூறியிருந்தார். இந்தப் புகாரினைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் காலை அவர் காணாமல் போயிருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் காணாமல் போன பிறகு அவரது செல்போனும் சுவிட் ஒப் செய்யப்பட்டுள்ளது. அவரே எங்கேனும் சென்றுள்ளாரா அல்லது அவரை யாரேனும் கடத்தி விட்டனரா என்று காவல்துறையினர் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், இயக்குநர் களஞ்சியம், காவல்துறை ஆணையரிடம் அஞ்சலி காணாமல் போய்விட்டதாகக் கூறி ஒரு புகார் மனுவைக் கொடுத்துள்ளார்.

# இந்திய பொருளாதார மேம்பாடு பிரதமர் மன்மோகன் ஜேர்மன் பயணம்



(புதுடில்லி)

பிரதமர், மன்மோகன் சிங், மூன்று நாள் பயணமாக ஜேர்மனிக்கு செல்லுமுன்னர். விமான நிலையத்தில், நிருபர்களிடம் மன்மோகன் சிங் கூறியதாவது: உட்கட்டமைப்பு, தயாரிப்பு, அறிவியல் தொழில்நுட்பம், உயர் கல்வி, தொழிற்பயிற்சி போன்ற துறைகளின் மேம்பாட்டுக்கு, இந்தியாவின் மிகச் சிறந்த நட்புறவு நாடாக ஜேர்மனி திகழ்கிறது.

உள்நாட்டில், முதலீடுகளை மேம்படுத்த அரசு தீவிரமாக முயன்று வருகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியை, எட்டு சதவீதம் உயர்த்த அரசு முயன்று வருகிறது. அந்த வகையில், வெளிநாட்டு முதலீடுகளை பெறுவதில் மத்திய அரசு தீவிரமாகவுள்ளது. ஜேர்மனியில் இருந்து, இந்தியாவுக்கு அதிக முதலீடுகளை பெற, இப்பயணம் முக்கிய வாய்ப்பாக அமையும். ஜேர்மனியுடன் பல ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

ஐரோப்பிய நாடுகளில், ஜேர்மனி இந்தியாவின் மிகப் பெரிய பொருளாதார நட்பு நாடாவுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். இப்பய ணத்தின் போது, ஜேர்மன் அதி பர் ஜோசிம் கவுக், பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் ஆகியோரை சந்தித்துப் பேசுகிறார்.

இந்தியா - ஜேர்மனி இடையே நட்புறவு ஏற்பட்டு, 60 ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்த சிறப்பைக் கொண்டாடும் வகையில், பிரம்மாண்ட விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில், இரு நாட்டுத் தலைவர்களும் பங்கேற்கின்றனர்.

# புலிகளை ஒடுக்கும் செயற்பாட்டில் இரும்பு பெண்மணி ஜெயலலிதா



(சென்னை)

ஜெயலலிதாவை இரும்பு பெண்மணி என்று அமெரிக்க தூதரகம் பாராட்டியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. மேலும், பயத்தால் தான் விடுதலைப்புலிகளை கருணாநிதி ஆதரித்தார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் முதல்வராக பொறுப்பு ஏற்ற ஜெயலலிதா, தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளை ஒடுக்க உத்தரவிட்டார். அந்தச் சமயத்தில் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் வெளிப்படையாக செயற்பட்டு வந்தனர்.

இது தொடர்பாக தமிழக காவல் துறையில் மிக உயரிய பொறுப்பில் இருக்கும் அதிகாரி ஒருவர் கூறுகையில், என்ன ஆனாலும் சரி... தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளை முற்றிலும் ஒடுக்க எங்களுக்கு ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். தேவைப்பட்டால் விடுதலைப்புலிகளை அழிக்கவும் அறிவுறுத்தி இருக்கிறார் என்றார்

இதை வைத்துப் பார்க்கும் போது ஜெயலலிதா இரும்பு பெண்மணியாக திகழ்வது தெரிகிறது. அவரது துணிச்சலான, உறுதியான நடவடிக்கைகளால் தான் தமிழ் நாட்டில் நீண்ட காலமாக இருந்த விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது என இவ்வாறு அந்த தகவல் தொகுப்பில் கூறப்பட்டு இருந்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது.

## இலங்கைத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து

# தமிழக எம்.பிக்கள் ஒற்றுமையாக குரல் கொடுத்ததாக சரித்திரமில்லை

இலங்கையில் தமிழர்கள் மீது நடந்த தாக்குதலை, இலங்கை மட்டும் நடத்தவில்லை. சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆயுதங்களுடன் தி.மு.க. காங்கிரஸும் ஆதரவு கொடுத்துநடத்தியது என பா.ஜ.க மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். காரைக்குடியில் நடந்த பொதுக் கூட்டத்தில், அவர் பேசியதாவது:

இலங்கையில் போர் நடந்த வேளை தி.மு.க.தலைவர் கருணாநிதி உண்ணாவிரதம் இருந்தார். உண்ணாவிரதம் இருந்த 3 மணி நேரத்தில், போரை



இலங்கை கைவிட்டதாக, அப்போதைய மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதைத் தொடர்ந்து, கருணாநிதி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். ஆனால், போர் முடியவில்லை.

தற்போதைய மாணவர் போராட்டத்தை, பா.ஜ.வரவேற்கிறது. ஆனால், 1965இல் மாணவர் போராட்டத்தால், பல்லாயிரம் குடும்பங்கள் பாதிப்படைந்தன. அதைப்போல், பிரிவினை சக்திக்கு, மாணவர்கள் துணை போய் விடக்கூடாது. கேரளாவில், இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டதற்கு, அங்குள்ள 20 எம்.பி.க்களும் ஒன்று சேர்ந்து, குரல் கொடுத்தனர்.

ஆனால், தமிழகம், புதுச்சேரியில், 40 எம்.பி.க்கள் இருந்தும், இலங்கை தமிழர்களுக்காக, ஒற்றுமையாக குரல் கொடுத்ததாக, சரித்திரம் இல்லை எனத் தெரிவித்தார்.


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஜெ.ஸ்ரெபான்

முகவரி : இல,86, 3 குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பொதுமக்களை இலக்கு வைத்து சிரியாவில் மோசமான தாக்குதல்


## மனித உரிமை அமைப்புகள் குற்றச்சாட்டு

(டமஸ்கஸ்)

சிரியாவில் பொதுமக்களை இலக்கு வைத்து அரசுப்படையினர் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன. சிரியா உள்நாட்டு போரில் அதிபர் படைக்கும், எதிர்த் தரப்பு போராளிப் படைக்குமிடையே கடுமையான சண்டை நடந்து வருகிறது. கடந்த 2 வருடங்களுக்கு மேலாக நடக்கும் சண்டையில் 75,000 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு காரணம் தாங்கள் தான் என்று இருதரப்பும் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி வருகின்றனர். இந்நிலையில், சிரியாவின் வடக்குப்பகுதியில் 54 இடங்களில் நடந்த தாக்குதல் குறித்து மனித உரிமை அமைப்பினர் விசாரணை நடத்தினர்.

இதுகுறித்து 59 தாக்குதல்களில் பெரும்பான்மையான தாக்குதல் அதிபர் படையின் வான் வழி மற்றும் கண்மூடித்தனமான



தாக்குதல்களால் மக்கள் பெரிதம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமை அமைப்புகள் கண்டறிந்து எச்சரித்துள்ளன.

மேலும் சிரியாவிற்கு எதிராக ஐ.நா. தடையை கொண்டுவருவதற்கு ரஷ்யாவும், சீனாவும், எதிர்க்கின்றன என்று அந்த அமைப்புகள் குறைகூறியுள்ளன

# 900 கி.மீ சென்று தாக்கும் ஏவுகணை பாகிஸ்தான் சோதனையில் வெற்றி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கடந்த ஆண்டு முதல் 60 கி.மீ. முதல் 1,300 கி.மீ. தொலைவிலான இலக்கைத் தாக்க ஏற்ற ஹாத்ப் ரக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. அந்த வகையில் அணுகுண்டுகளைச்சுமந்து சென்று 900 கி.மீ. இலக்கைத் தாக்க ஏற்ற ஹாத்ப் -4 ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் நேற்று முன்தினம் நடத்தியுள்ளது.


இந்த ஏவுகணை நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தாக்கி, எல்லா வகையிலும் வெற்றி கண்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஏவுகணை சோதனை குறித்து அதிகாரிகள் கூறுகையில், 'ஷஹீன்-1 என்று அழைக்கப்படுகிற ஹாத்ப்-4 ஏவுகணை சோதனை வெற்றி அடைந்துள்ளது. இது பாகிஸ்தானின் ஆற்றலை பல மடங்கு பெருக்கும்'' என்றனர்.

இராணுவம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், தற்போது இருந்து வருகிற ஏவுகணைகளிலிருந்து தொலைவு, தொழில்நுட்ப அம்சங்கள் என பலவற்றிலும் மேம்பாடு செய்யப்பட்டதுதான் ஹாத்ப்-4 ஏவுகணை'' என கூறப்பட்டுள்ளது

இந்த ஏவுகணை சோதனையை போர் திட்டப்பிரிவு தலைவர் கலீத் அகமது கித்வாய், இராணுவ உயர் அதிகாரிகள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் நேரில் பார்வையிட்டனர்.

# சோதனைக்குழாய் முன்னோடி ரொபேட் எட்வேட்ஸ் மரணம்



சோதனை குழாய் குழந்தை உருவாக்கத்துக்கு வழிவகுத்த செயற்கை கருவூட்டல் முறையை கண்டறிந்த இங்கிலாந்து விஞ்ஞானி ரொபேட் எட்வேட்ஸ் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 87. நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், அவர் காலமானார். அவர் செயற்கை கருவூட்டல் முறையில் ஆற்றிய முன்னோடியான பணிக்காக 2010ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர் ஆவார்.

கடந்த 1978ஆம் ஆண்டு, உலகின் முதலாவது சோதனை குழாய குழந்தை லூயிஸ் பிரவுன் பிறந்தது. அதற்காக, உலகம் முழுவதும் ரொபேர்ட் எடவேட்டுக்கு பாராட்டு குவிந்தது.

வடக்கு இங்கிலாந்தில் உள்ள யார்க்ஷயரில் 1925ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் திகதி அவர் பிறந்தார். இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்து இராணுவத்தில் பணியாற்றிய அவர், பின்னர், வேளாண் விஞ்ஞானமும், விலங்குகள் மரபணுவியலும் படித்தார்.

# சர்ச்சைக்குரிய தீவுப்பகுதியில் மீன்பிடிக்க தாய்வானுக்கு அனுமதி

## – எரிச்சலடையும் சீனா

(பீஜிங்)

சர்ச்சைக்குரிய தீவுப்பகுதியில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை ஜப்பான் வழங்கியுள்ளமையானது சீனாவிற்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு சீனக்கடல் பகுதியில் எண்ணெய் வளமும், மீன்பிடி பகுதிகளாக விளங்கும் ஜப்பான் கட்டுப்பாட்டில் உள்ள தீவுகளை உரிமை கொண்டாடுவதில் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் பிரச்சினை இருந்து வருகிறது.



சென்காகு என்று ஜப்பானும், டையோயு என்று சீனாவும் அழைக்கும் இந்த தீவுகளுக்கு தாய்வானும் உரிமை கொண்டாடி வருகிறது. இப்பிரச்சினையால், ஜப்பான், சீனா நாடுகளிடையே இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்தத் தீவுப் பகுதிகளில் மீன்பிடித்துக் கொள்ள தாய்வானுக்கு ஜப்பான் அனுமதியளித்துள்ளது. இது சீனாவுக்கு எரிச்சலை ஊட்டியுள்ளது. 17 வருட பேச்சுவார்த்தைக்குப் பிறகு ஜப்பானுக்கும் தாய்வானுக்கும் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக ஊடகச்செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# படகில் ஏற்றிய பேருந்து கவிழ்ந்து முப்பது பேர் காணாமற் போயினர்

## – பங்களாதேஷில் துயரம்



(டாக்கா)

பங்களாதேஷில் 40இற்கும் மேற்பட்டோருடன் சென்ற பேருந்து ஒன்று பாரிசால் மாவட்ட உள்நாட்டு போக்கு வரத்து படகில் ஏற்றப்பட்டு ஆற்றைக் கடந்து சென்றது. ஆழமான ஆற்றுவழியாக சென்ற அந்த பேருந்து அதிக எடை காரணமாக திடீரென கவிழ்ந்தது.


இதில் நீரில் மூழ்கி பயணிகள் அனைவரும் தத்தளித்தனர். ஆனால் 8 பேர் மட்டும் நீந்தி கரையேற மற்ற பயணிகள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. காணாமற் போனவர்களை மீட்டெடுக்க சுழியோடிகள் வரவழைக்கப்பட்டுதேடுதல் நடத்தப்படுகிறது

பங்களாதேஷில் வீதிகள் பராமரிப்பின்றி ஆயிரக்கணக்கானோர் இறப்பது சர்வசாதாரணமாக நடக்கக்கூடிய செயல் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# அன்டார்டிக்கா பகுதிகளில் கண்காணிப்புக் கருவிகள்

தென் துருவக் கண்டமான, அனடார்டிக்காவின், சில அணுக முடியாத பகுதிகளில், அளவீட்டுக் கருவிகளை விமானத்திலிருந்து சிறிய பரசூட்டுகளில் இணைத்து,விஞ்ஞானிகள் தரையிறக்கியுள்ளனர்.



அன்டார்க்டிக்காவின் மிகப் பெரிய, மற்றும் மிக வேகமாக மிதந்து செல்லும் பனிக்கட்டி ஓடைகளின் மீது இந்த 25 மெல்லிய ஈட்டி போன்ற கருவிகள் போடப்பட்டுள்ளன.

இந்தன் பனி ஓடைகள் எப்படி கடலை நோக்கிச் செல்கின்றன என்பதை செய்கோள் தொடர்பு மூலம் கண்காணிக்க இவை உதவும்.

இந்தப் பகுதி பிளவுகளும், மிக ஆழமான பகுதிகளும் நிறைந்திருந்ததால், இதற்கு முன்னர், நேரடியாகப் பயணிக்க மிகவும் ஆபத்தானதாகக் கருதப்பட்டு, அணுக முடியாத நிலையில் இருந்தமை குறிப்பிடத் தக்கது.

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் வடக்கே பாடன் தீவுகளில் நேற்று லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.8 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் அந்நாட்டு நேரப்படி அதிகாலை 4.20 மணிக்கு (இலங்கை நேரப்படி அதிகாலை 1.50 மணி) ஏற்பட்டது. பூமிக்கு அடியில் 4.2 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் பாதிப்புகள் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை.

மக்கள் அதிகம் வசிக்காத பகுதிகளில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதால் பாதிப்புகள் ஏற்படவில்லை என்று அந்நாட்டின் எரிமலை மற்றும் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை

# பாகிஸ்தானுக்கான நிதியுதவி அதிகரித்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்கான அமெரிக்க நிதியுதவியை 40 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவித்துள்ளார். அமெரிக்காவில் அதிபர் ஒபாமா 3.77 டிரில்லியன் டொலர் பட்ஜெட்டை நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். அப்போது நாட்டில், வேலைவாய்ப்பை மேம்படுத்த அவர் உறுதிமொழி அளித்துப் பேசினார். அதில் வெளிநாட்டுக்கான தற்செயல் நடவடிக்கைக்காக வழங்கப்படும் நிதி உதவியாக கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட 100 கோடி டொலர் அமெரிக்க உதவியை உயர்த்தியுள்ளார். அதன்படி பாகிஸ்தானுக்கு 40 சதவிகிதம் கூடுதல் நிதியாக 140 கோடி டொலர் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

# வாழ்வின் எழுச்சி புத்தாண்டு சந்தை

(திருநெல்வேலி)

யாழ். பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி மற்றும் வாழ்வெழுச்சி கிராம புததாண்டு விற்பனைச் சந்தை உற்பத்திப் பொருட்கண்காட்சி நேற்றையதினம் யாழ். இளங்சிங்கம் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

யாழ். பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்த புத்தாண்டுச் சந்தையில் சமுர்த்தி பயனாளிகளின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வின் யாழ். பிரதேச செயலகத்தின் சமுர்த்தி மகா சங்கத்தினால் குடும்பத் தலைவரை இழந்து வறுமைக் கோட்டின் கீழ்வரும் 12 பேருக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோககில் துவிச்சக்கர வண்டிகள வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், சமுர்த்தி இணைப்பாளர் இரகுநாதன், மாநகர சபை உறுப்பினர் தி.இளங்கோ, சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை உடுவில் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்களிலும் தமிழ் சிங்கள திவிநெகும புத்தாண்டுச் சந்தை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

## வாழைக்குலையை நிறுக்க இலத்திரனியல் தராசு வேண்டும்




(மருதனார்மடம்)

மருதனார்மடம் வாழைக் குலைச் சந்தையில் வாழைக் குலைகளை நிறுப்பதற்கு எலக்ரோனிக் தராசு பயன்படுத்தப்படுவதில்லை என பொதுமக்களும் வாழைக்குலை வியாபாரிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.


எலக்ரோனிக் தராசு மூலம் நிறுப்பதனால் நிறுத்தல் அளவை, மக்களும் வாழைக்குலையை விற்கும் வியாபாரிகளும் பார்க்க முடியும். இதனால் சந்தை வியாபாரிகளும் நியாயமான நிறுவையை மேற்கொள்ளமுடியும்.

ஆனால் இச்சந்தையில் எலக்ரோனிக் தராசு இல்லாமல் வேறு தராசுகளில் நிறுக்கப்படுவதால் மக்களும் வியாபாரிகளும் நிறுத்தல் அளவை பார்க்க முடியாது. தாம் நஷ்டமடைவதா என தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

எனவே இச் சந்தை வியாபாரிகளும் எலக்ரோனிக் தராசைப் பயன்படுத்த வேண்டும் என மக்களும் வியாபாரிகளும் கேட்டுக் கொள்கின்றனர்.

## ஹட்டன் சிறுவர் இல்லத்தில் நடந்தது என்ன?

ஹட்டன் கொட்டக்கல பகுதியில் வீடொன்றில் நடத்தப்பட்ட சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற துஷ்பிரயோகத்தைத் தொடர்ந்து அந்த இல்லம் சுற்றிவளைக்கப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அந்த இல்லத்திலிருந்து மீட்கப்பட்ட 5 வயதிற்கும் 11 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரையிலும் ஹட்டனிலுள்ள பிரிதொரு சிறுவர் இல்லத்தில் வைக்குமாறு ஹட்டன் பதில் நீதவான் தமயந்தி பெர்ணன்டோ உத்தரவிட்டுள்ளார். அத்துடன் அங்கிருந்து கைது செய்யப்பட்ட ஏனைய மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலய பூச்சப்பறத் திருவிழாவின்போது சுவாமி வீதியுலா வருவதைக் காணலாம். (137)

## 'சைவக்களஞ்சியம்' நாளை வெளியீடு

(யாழ்.நிருபர்)

காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தால் வெளியிடப்படும் மூதறிஞர் கலாநிதி பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்களின் 'சைவக்களஞ்சியம்' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அமைசசின் உதவிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் மகாராணி க.சோமசேகரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வெளியீட்டுரை நிகழ்த்துவார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரவு நூல் ஆய்வுரை நிகழத்துவார்.

கலாநிதி பண்டிதர் க.வைதீசுவரக்குருக்கள் நூலை வெளியீட்டு வைக்க தொழிலதிபர் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

1500 ரூபா செலவில் 57 அறிஞர்களின் கட்டுரைகளும் ஆவணப்படங்களும் கொண்ட அழகிய வடிவமைப்பில் நூல் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

## டெங்குத் தாக்கம் மூவர் மருத்துவமனையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய மூவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக வைததியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தும சாவகச்சேரி மற்றும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தும் தலா ஒவ்வொருவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் அதிகாரி தெரிவித்தார். (பா)

### இந்திய சுற்றுலா...

பிக்குமார் தாக்கப்பட்டதை அடுத்து இலங்கையில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை குறைகிறது பயணிகள் போக்குவரத்து வீழ்ச்சியடைந்த நிலையிலேயே சேவைகளை நிறுத்த முடிவெடுக்கப்பட்டதாக மிஹின் லங்கா பயணச்சீட்டுகளை விற்பனை செய்யும் ட்ரான்ஸ்லங்கா கூறுகிறது. கடந்த செப்ரெம்பரில் வேளாங்கன்னி வந்த இலங்கையர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து பயணிகள் வருகை வீழ்ந்திருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கைக்கெதிரான தீர்மானம் தொடர்பாக தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்ததன் பின்னணியில் பயணிகள் எண்ணிக்கை இன்னமும் குறைந்திருக்கிறது.

இதனால், பல்வேறு இலங்கை விமான நிறுவனங்களும் தங்கள் சேவைகளைக் குறைத்துவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பிலிருந்து பத்து இந்திய நகரங்களுக்கு விமான சேவைகள் தற்போது உள்ளன என்றாலும் சென்னைக்கே மிக அதிக எண்ணிக்கையிலான சேவை நடக்கின்றது, இரண்டாம் இடத்தில் திருச்சி இருக்கிறது.

### அதிவேகம்...

நேற்று நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த சாரதி உட்பட மூன்று பேர் காயமடைந்துள்ளதுடன், ஆட்டோவும் முற்றாக சேதமடைந்துள்ளது. இந்த விபத்து குறித்து யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### இலங்கை...

எதிராக பொருளாதாரத் தடை விதிப்பதில் சிரமம் இல்லை என்றபோதிலும் இதனால் இலங்கைவாழ் தமிழர்கள் பாதிக்கப்படுவர் என அவர மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர்.

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பில் தீர்மானம் நிறைவேற்றினால், இலங்கைக்கு ஆதரவான நாடுகள் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை நிராகரிக்கக் கூடுமென அவர் தெரிவித்துள்ளார்.

### இந்திய மீனவர்கள்...

உத்தரவிட்டுள்ளார். விடுதலை செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்களையும் தலை மன்னார் கடற்படையினரின் உதவியுடன் கடல் மார்ககமாக இராமேஸ்வரத்திற்கு அழைத்துச் சென்று இந்திய கடற்படையினரிடம் ஒப்படைக்கவுள்ளதாக தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுபபதிகாரி முஹமட் ஜெமில் நேற்று தெரிவித்தார்.(02)

### இந்திய உதவிகள்...

அடைந்த வர்த்தக நிலையங்களைப் புனரமைப்பதற்கான இந்திய அரசின் நிதியுதவியை வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார். இலங்கை வணிகர் மன்றங்களின் ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கமைய இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தின் அனுசரணையுடன், 1230 வர்த்தகர்களுக்கு இந்த நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த சில மாதங்களாக, வட இலங்கையின் பல இடங்களுக்கும் சென்று வந்துள்ள அவர், அங்கு குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதார வளர்ச்சியில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அரசியல் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிடுவதற்காகத் தான் இங்கு வரவில்லை எனக் கூறிய அவர், வடபகுதியில் அழிந்து போயுள்ள ரயில் பாதைகளை அமைப்பதிலும், காங்கேசன் துறை துறைமுகத்தை மீள கட்டியெழுப்பவும், உதவியுள்ள இந்திய அரசாங்கம், கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவையைப் போன்று தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையையும் விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்திய வீட்டுத்திட்டப் பணிகள் நல்லமுறையில் முன்னெடுக்கப்பட்டிருப்பதை நேரில் கண்டதாகக் கூறிய அவர், யாழ்ப்பாணத்தின் மீன்வலை உற்பத்தி தொழிலகத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கான உதவியையும், பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கான இயந்திரத் தொகுதியையும் இந்தியா வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த வைபவத்தில் இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், இந்தியத் தூதரகத்தின் முதல் செயலாளர் ஜஸ்டின் மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கேதீஸ்வரன், இராணுவ மற்றும் பொலிஸ உயரதிகாரிகள், வணிகர் மன்றங்களின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத் தலைவர்கள், வணிகர் மன்றங்களின் ஒன்றியத்தின் ஆலோசகர் டபிள்யு.ஜே.சூசைரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முச்சக்கர...

தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஆட்டோ சங்கம், மினிபஸ்சங்கம், வர்த்தக சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் மே மாதம் முதலாம் திகதி புதன்கிழமை முதல் அமுல்படுத்தப்படும் வகையில் புதிய ஏழு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வைரவர் கோவில் வீதி ஒரு வழிப்பாதை காலை 07.00 மணி முதல் இரவு 09.00 மணி வரைக்குமாக மாற்றுதல், கன்னாதிட்டி சந்தியில் இருந்து காங்கேசன்துறை வீதி வரை ஒருவழிப் பாதையாக மாற்றுதல், காப்பற் வீதியினை சேதப்படுத்துவது (கற்பூரம் எரித்தல்) தடைசெய்யப்பட்டுள்ளது அவ்வாறு காப்பற் வீதியில் வைத்து கற்பூரம் எரிப்பவர்கள் பாதுகாப்பான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் குற்றப்பணமாக 10 ஆயிரம் ரூபா அறவிடப்படும், காங்கேசன்துறை வீதி அகலிப்பு பணிகள் முடிவுற்றிருப்பதால் இந்தப் பாதையை இருவழிப் பாதையாக பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவது. யாழ். நகரில் பிரயாணம் செய்யும் ஆட்டோக்கள் அனைத்தும் பதியப்பட வேண்டும், பதியப்பட்ட ஆட்டோக்களுக்கு யாழ். மாநகர சபையால் ஸ்ரிக்கர் வழங்கப்படும், ஆட்டோ சாரதிகள் அனைவரும் கட்டாயம் சீருடை அணிய வேண்டும், அனைத்து ஆட்டோவிலும் மீற்றர் பொருத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# இராணுவ விசாரணை அறிக்கையை அடியோடு நிராகரிக்கிறது கூட்டமைப்பு



இராணுவ விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. யுத்தம் தொடர்பில் இராணுவ நீதிமன்றினால் நடத்தப்பட்ட விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அந்த அறிக்கையை நிராகரிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஒரு பொதுமகனைக் கூட கொல்லவில்லை என்ற இராணுவத்தின் அறிக்கை நகைப்பிற்குரியது என அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இழைக்கப்பட்ட தவறுகளை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு அவை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தவறுகளை பகிரங்கமாக ஒப்புக்கொள்வதன் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை யுத்தத்திற்கு இந்தியா பொறுப்பு என்ற குற்றச்சாட்டையும் நிராகரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வினை வழங்கியிருந்தால் ஆயுதக் குழுக்கள் உருவாகியிருக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்களே குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# 7 விக்கெட்டுக்களால் புனே அணி வெற்றி



ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் 13ஆவது லீக் புனேவில் நேற்று இரவு 8.00 மணிக்கு தொடங்கி நடைபெற்ற இப்போட்டியில் புனே வாரியர்ஸ், ராஜஸ்தான் றோயல் அணிகள் மோதியதில் 7 விக்கெட்டுக்களால் புனே அணி வெற்றியீட்டியுள்ளது. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி கப்டன் ராகுல் டிராவிட் முதலில் துடுப்பெடுத்தாட தேர்வு செய்தார்.

குஷால் பெரேரா, ரகானே தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். பெரேரா முதல் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். 2 ஆவது விக்கெட்டுக்கு ரகானேவுடன் டிராவிட் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக விளையாடி வந்தனர். 'ரகானே 30 ஓட்டங்கள் எடுத்திருக்கும் போது ராகுல் சர்மாவின் பந்தில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து டிராவிட்டுடன் பிஹன்னி ஜோடி சேர்ந்தார். டிராவிட் அரைச் சதம் அடித்ததுடன் 54 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். பிஹன்னி 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த ஹாட்ஜ் 22, பால்க்னர் 19 ஓட்டங்கள் எடுக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 145 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து விளையாடிய புனே அணி 18.4 ஓவர்கள் 148 ஓட்டங்களை 3 விக்கெட் இழப்புடன் பெற்று வெற்றியீட்டியது.

# திரையுலக நண்பர்களுக்கு அழைப்பு



தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களைக் கண்டித்தும் இலங்கையின் உண்மை நிலைமையை நேரில் வந்து பார்க்குமாறும் வலியுறுத்தி இலங்கையின் நடிகர், நடிகைகள் நேற்று சத்தியாகிரகப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். தமிழகத்தில், இலங்கைக்கு எதிராக தென்னிந்திய திரையுலக கலைஞர்கள் அண்மையில் முன்னெடுத்த போராட்டத்தைப் போன்றே நேற்று இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அதிக மாணவர்கள் சித்தி

இம்முறை வெளியான க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின்படி 65 வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இந்தத் தகவலை குறிப்பிட்டார்.


# துரத்துகிறது துரதிர்ஷ்டம் சவுதிக் கனவு கலைகிறது

சவுதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைகின்ற சட்டவிரோத இலங்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. சட்டவிரோத பணியாளர்களை தொழிலில் ஈடுபடுத்தியுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்தமையே இதற்குக் காரணம் என பணியகத்தின் பொது முகாமையாளர் ஹரிஸ் சந்திர பட்டகொட விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ் சட்டவிரோதமாக சவுதிஅரேபியாவில் தங்கியுள்ள சுமார் 300 இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பும் நோக்கில் ஜெத்தாவிலுள்ள கொன்சியூலர் அலுவலகத்தை நாடியிருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சவுதி அரேபியால் இலங்கைப் பணியாளர்கள் சுமார் மூவாயிரம் பேர் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. சவுதி அரேபியாவிலிருந்து அவர்கள் மீண்டும் நாடு திரும்புவதற்காக தலா ஐயாயிரத்து 800 சவுதி றியால்களை கட்டணமாக செலுத்த நேரிட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்திய உதவியால் உருவாகின வீடுகள்



கிளிநொச்சி மாவட்ட பளை பிரதேச செயலக பிரிவில் சோரன்பற்று கிராமத்தில் அமைக்கப்பட்ட இந்திய உதவியுடனான வீட்டுத்திட்டம் நேற்று நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார், இந்திய வெளிவிவகார அமைச்சின் சிறப்பு செயலாளர் பி.எஸ்.ராகவன் மற்றும் இந்தியத் துணைத் தூதுவர் மகாலிங்கம் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோரினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்தியத் துணைத் தூதரகத்தின் முதல் செயலாளர் ஜஸ்டின் மோகன் கிளிநொச்சி பிரதேச செயலர் சத்தியசீலன் யு.என்.ஹபிராட் நிறுவன அதிகாரிகள் கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் மானியத்தில் வெட்டு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருள் மானியம் பெறுபவர்களின் எண்ணிக்கையில் பத்து வீதம் குறைநிரப்புச் செய்யப்பட்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 443 படகுகளுக்கு இவ்வாறு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டு வந்ததாகவும் அந்த எண்ணிக்கை 400 ஆகக் குறைப்புச் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் 'ஒன்றுக்கு மேற்பட்ட படகுகள் வைத்திருப்பவர்கள் மற்றும் இரட்டைப் பதிவிற்கு உட்பட படகுகள் வைத்திருப்பவர்களின் எரிபொருள் மானியங்களே இவ்வாறு வெட்டப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர் இம்முறை எரிபொருள் மானியத்திற்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பதன் காரணமாகவும் இவ்வாறு வெட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (பா)


Taste of Jaffna Restaurant

101, Main Street, Jaffna

Tasty of Jaffna Restaurant இன் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி அனைத்து உணவு வகைகளையும் மிகக் குறைந்த விலையில் வழங்குகின்றோம்

| | | |
|---|---|---|
| கோழி சாப்பாடு பார்சல் | 170.00 | (சாதாரணம்) |
| | 220.00 | (விசேடம்) |
| மரக்கறி சாப்பாடு பார்சல் | 110.00 | (சாதாரணம்) |
| | 150.00 | (விசேடம்) |
| மீன் சாப்பாடு பார்சல் | 150.00 | (சாதாரணம்) |
| | 220.00 | (விசேடம்) |
| கோழி பிரியாணி பார்சல் | 240.00 | (சாதாரணம்) |
| | 350.00 | (விசேடம்) |
| மரக்கறி பிரியாணி பார்சல் | 170.00 | (சாதாரணம்) |
| | 220.00 | (விசேடம்) |
| சிக்கன் பிறைட் றைஸ் பார்சல் | 200.00 | (சாதாரணம்) |
| | 240.00 | (விசேடம்) |
| மரக்கறி பிறைட் றைஸ் பார்சல் | 140.00 | (சாதாரணம்) |
| | 170.00 | (விசேடம்) |

(C/2514)

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து வகையான நிகழ்வுகளுக்கும் Buffet முறையில் குறைந்த விலையுடன் உணவு கொண்டு வந்து பரிமாறப்படும்



Buffet Menu 01
Steamed Rice
Chicken Curry
Brinjal Churtney
Dhal Curry
Tomato onion salad
Boiled Egg
Dessert : Ice Cream

Price 290 + 10% Service Charge

Buffet Menu 02
Special Biriyani Rice
Chicken Curry
Brinjal Churtney
Potato Temperd
Tomato onion salad
Boiled egg
Dessert : Ice Cream

Price 340 + 10% Service Charge

Hot line : 021 222 1322


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.